# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 15 செவ்வாய்க்கிழமை (28-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:105


# பளை வரை முன்னேறிய புலிகளை முறியடிப்பதில் படையினர் தீவிரம்!

## துண்டிக்கப்பட்ட கண்டி வீதியை மீண்டும் கைப்பற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்28

**வடமராட்சி கிழக்கில் நேற்று முன்தினம் இரவு கடல், தரை ஆகிய முனைகளில் பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பித்த புலிகள், பளை வரை முன்னேறியிருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**பளையில் கண்டி வீதி வரை வந்துள்ள புலிகள் அணியை அங்கிருந்து அகற்றி, துண்டிக்கப்பட்ட கண்டி வீதியில் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பதில் நடவடிக்கை ஒன்றில் இராணுவத் தரப்பு மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.**

'ஓயாத அலைகள் - 3' எனப் பெயரிடப்பட்டுள்ள புலிகளின் இந்தத் தாக்குதல் நடவடிக்கை வடமராட்சி கிழக்கில், தாளையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் பெருத்த எடுப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பகுதி ஊடாக புலிகள் தரையிறங்க முற்பட்ட சமயம் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் முதலில் கடும்சண்டை வெடித்தது.

புலிகளின் சில படகுகளை தாம் தாக்கி அழித்ததாகக் கடற்படையினர் அறிவித்தனர்.

தரையிறங்கிய தமது அணிகள் பளை வரை முன்னேறி, கண்டி வீதியைக் கைப்பற்றி இயக்கச்சி ஆனையிறவுப் பகுதிக்கான தரை வழி விநியோகப் பாதையைத் துண்டித்துவிட்டதாகப் புலிகள் அறிவித்தனர்.

பளையில் படையினரின் பதினொரு பீரங்கிகளை தாங்கள் தகர்த்துள்ளதாகவும் -

அங்கு படையினரின் ஆயுதக் கிடங்கு ஒன்றை அழித்து நாசமாக்கியுள்ளதாகவும் -

பளைக்கு தெற்கே உள்ள இயக்கச்சி இராணுவ முகாமின் முன்னரங்க நிலைகளை ஊடுருவியுள்ள தமது வீரர்கள் இயக்கச்சி முகாம் மீது ஷெல், பீரங்கித் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதாகவும்

புலிகள் தரப்பில் அறிவிக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த 20 பேர் அனுமதி; மேலும் பலர் சிக்குண்ட நிலையில்!

யாழ்ப்பாணம், மார்ச்28

வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு முதல் இடம்பெற்று வரும் அகோர ஷெல் வீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்களில் சிக்கி காயமடைந்த பொதுமக்களில் - நேற்று இரவு 7.30 மணிவரை - 20 பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 13 பேரின் பெயர் விவரங்கள் கிடைத்துள்ளன.

இந்தப் பிரதேசங்களில் காயமடைந்த நிலையில் மேலும் பலர் சிக்குண்டிருப்பதாக அப்பகுதிகளில் இருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

மாமுனை கடற்பகுதியில் ஞாயிறு இரவு 9 மணியளவில் திடீரெனக் கேட்ட பெரும் வெடியோசைகளைத் தொடர்ந்து கடற்பரப்பில் இருந்தும் தரையில் இருந்தும் ஷெல்கள் முழங்கத்தொடங்கியதாகவும் -

சரமாரியான வேட்டுச் சத்தங்கள் எங்கும் கேட்டதாகவும் -

அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மாமுனைக் கடற்பகுதியில் புலிகள் பல படகுகளில் வந்து தரையிறங்கியபோது மோதல் மூண்டதாகவும் கூறப்படுகிறது.

ஆனையிறவுப் பக்கமாக இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் செம்பியன் பற்று வடக்கு தனிப்பனை என்ற இடத்தில் குடியிருப்புப் பகுதிகள் மீது வீழ்ந்தன. மாமுனைப் பகுதியிலும் பரவலாக ஷெல்கள் வீழ்ந்தன.

இரவில் ஷெல்கள் விழத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசர்கேணியில் பெண் காயம்

யாழ்ப்பாணம், மார்ச்28

பளை அரசர்கேணிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் பெண் ஒருவர் காயமடைந்தார். கந்தையா யோகம்மா (வயது 50) என்ற அந்தப் பெண் அங்கிருந்து மீட்கப்பட்டு நேற்று இரவு 9.30மணியளவில் அம்புலன்ஸ் மூலம் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (ஐ-7)

## காயமடைந்தோரில் 13 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச்28

செம்பியன்பற்று, மாமுனை பகுதிகளில் ஞாயிறு இரவு முதல் இடம்பெற்றுவரும் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் சிக்கி காயமடைந்தோரில் 13 பேரின் விவரங்கள் கிடைத்துள்ளன. இவர்கள் அனைவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

* மகாலிங்கம் கேசவஞானம் (வயது 48)

* கேசவஞானம் மதனராஜன் (வயது 20 - ஆழியவளை இ.த.க. பாடசாலை மாணவன்)

* வ.விஜயகுமார்(வயது 36)

* விஜயகுமார் சுபாஜினி (வயது31) நிறைமாதக் கர்ப்பிணியான இவர் காலில் படுகாயமடைந்தார். இவரது குழந்தை சத்திரசிகிச்சை மூலம் உடனடியாகப் பிரசவிக்கப்பட்டது. இவரது காலும் அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டது.

* வேல்விநாயகம் பாக்கியம் (வயது 65)

* ஜெயபாலசிங்கம் திரேசம்மா (வயது 40)

* பி.டேவிட் (வயது 9 - மாணவன்)

* குமரையா சுமங்கலா (வயது 14 - மாணவி)

* தவராசா ராணி(வயது 46)

* திருமதி பி.தேவி(வயது 84)

* கதிர்காமு தவச்சந்திரலிங்கம் (வயது 18)

* கிருஷ்ணபிள்ளை செல்லாச்சி (வயது 63)

* நல்லதம்பி கிருஷ்ணபிள்ளை (வயது 70) (ஐ-7-15-109-173-118)

## பிரசவித்த குழந்தையுடன் சென்ற ஓட்டோ மீது சூடு! கணவன், மனைவி பலி!!

### சாரதியும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்28

பளை இத்தாவில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் ஓட்டோ ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அதில் பயணம் செய்த இளம் கணவனும் மனைவியும் அந்த ஓட்டோவின் சாரதியும் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். பச்சிளம் குழந்தையும் மற்றொரு பெண்ணும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்றைப் பிரசவித்த இளம் தாயும் அவரது கணவரும் மற்றொரு பெண்ணும் யாழ்நகரில் இருந்து ஓட்டோவில் பளையில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயமே இந்த விபரீதத்தில் சிக்கினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பளைக்கான போக்குவரத்து எழுதுமட்டுவாளுடன் நிறுத்தம்

தென்மராட்சி,மார்ச்28

பளைப் பகுதியில் திடீரெனச் சண்டை மூண்டதையடுத்து பளைக்கான போக்குவரத்துக்கள் அனைத்தும் நேற்று எழுதுமட்டுவாளுடன் நிறுத்தப்பட்டன.

செம்பியன்பற்று - மருதங்கேணி சேவையில் ஈடுபடுவதற்காக ஞாயிறன்று மாலை மருதங்கேணிக்குச் சென்ற பருத்தித்துறை டிப்போ பஸ் நேற்று மாலை வரை அங்கிருந்து திரும்பி வரவில்லை.

பளைப் பகுதியில் நேற்றுப் பகல் திடீரென பெரும் வெடிச் சத்தங்கள் கேட்டதை அடுத்து கண்டி வீதி வழியாக வந்த வாகனங்களை எழுதுமட்டுவாளுக்கு அப்பால் செல்ல வேண்டாம் என்று கூறி பொதுமக்கள் வீதியில் வைத்து மறித்ததைக் காணமுடிந்தது.

எழுதுமட்டுவாள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் பதற்றம் நிலவியது. ஷெல் சத்தங்களால் இப்பகுதி அதிர்ந்து கொண்டிருந்தது.

பளைப பகுதிக்கான தொலைபேசி சேவைகளும் நேற்று செயலிழந்திருந்தன. (ஐ-3-5-7-8-9-109-118)

## பளைப் பகுதியில் நேற்றிரவு அமைதி

யாழ்ப்பாணம்,மார்ச்28

விடுதலைப் புலிகளின் அணி ஒன்று முன்னேறியிருப்பதாக கூறப்படும் பளைப்பகுதியில் நேற்று மாலை முதல் நள்ளிரவு வரை அமைதி நிலவியது. இடையிடையே ஒருசில ஷெல் சத்தங்களை மட்டும் கேட்கக்கூடியதாக இருந்தது. அப்பகுதியில் பெரும் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

நேற்று பிற்பகலில் இரண்டு கிபிர் விமானங்கள் அப்பகுதியை வட்டமிட்டு குண்டுத்தாக்குதலை நடத்தின. இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(ஐ-7-118-173-15)

## நீதிவான் விக்னராஜா முன் செம்மணி புதைகுழி விவகாரம்

### இன்று யாழ் - நீதிமன்றில்

யாழ்ப்பாணம், மார்ச்28

செம்மணி புதைகுழி விடயம் யாழ்.நீதிவான். ஆர்.ரி.விக்னராஜா முன் இன்று எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. இதற்கான பணி உத்தரவு நீதிச்சேவை ஆணைக்குழுவில் இருந்து நேற்று மாலை அவருக்குக் கிடைத்தது.

இதுவரை செம்மணி விவகாரம் தொடர்பாக விசாரணைகள் மன்னார் நீதிவானும், யாழ்.மேலதிக நீதிவானுமாகிய எம்.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்று வந்ததும் - செம்மணி மரணவிசாரணைத் தீர்ப்பை கடந்த கடந்த 14ஆம் திகதி வழங்கிய அவர் அத்தோடு தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணி பூர்த்தியடைந்துவிட்டதாக அறிவித்திருந்ததும் - தெரிந்தவையே.

இதனையடுத்து இந்த விடயத்தை கையாளும் பொறுப்பு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## "பஜனாவளி" வந்துவிட்டது!

தொடர்பு :- *சாயிபாபா களஞ்சியம்*
*கோவில் வீதி,*
*நல்லூர்.* (C/11556)



## விற்பனையாகிறது

## *வைகறை அறிவு*

(மாத வெளியீடு) விலை 10/- மட்டுமே

* பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
* ராம்கரன் புத்தகசாலை, திருநெல்வேலி.
* கிருபா றேடிங் சென்ரர், பரமேஸ்வராசந்தி.

**அ.சதானந்தன்**
திருநெல்வேலி. (74884)


## ஆத்மசாந்தி வைபவம்

29-02-2000 அன்று சிவபதமெய்திய
எமது குலவிளக்கு, குடும்பத்தெய்வம்

அமரர்

## பொன்னையா வேலாயுதம்

(VECTOR)

அவர்களின் அந்திய, சபிண்டிகரணக் கிரியைகள் எதிர் வரும் 30-03-2000 (வியாழக்கிழமை) காலை எமதில்லத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அவ்வமயம், இவ் வைபவத்திற்கு தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், அதனைத் தொடர்ந்து உடுப்பிட்டி அருள்மிகு சந்திரசேகர் விரபத்திர ஆலய அன்னதான மண்டபத்தில் நாம் வழங்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வேலாயுத பவனம்"
உடுப்பிட்டி

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

(74875)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல் - 2000

2000ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 31.03.2000 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | - | 15% |
| ஏனைய காணிகள் | - | 20% |

காசோலையாகச் செலுத்துவோர் "மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்" என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர சபை
யாழ்ப்பாணம்.
27.03.2000

*வே.பொ.பாலசிங்கம்*
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/11553)


*குளிர்மையின் மறுபெயர்!*

# NIPPON

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30ற்கும் மேற்பட்ட மாதிரிகள்!

## மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18, Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.


## நோயாளர் கப்பல் சேவை இன்று

நாளை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நாளைய சேவையில் செல்லப் பதிவு செய்தவர்கள் இன்று காலை 8 மணிக்கு வைத்தியசாலையில் சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-15-139)

## மாதாந்த உதவிப்பணம்

யாழ்.பிரதேச செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியனவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கான மார்ச்மாதக் கொடுப்பனவு தற்போது அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பணத்தைப் பெறுபவர்கள் தத்தமது பகுதியில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் நேரில் சென்று தத்தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலாளர் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் ரி.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (ஜ-30)


## ராஜா

யாழ்ப்பாணம்
3ஆவது வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன், சிவாஜி
மற்றும் பலர் நடித்த

**படையப்பா**

காட்சிகள்
10.30, 2.30
(C/11349)



## நாகம்ஸ்

சுன்னாகம்
ரம்யாகிருஷ்ணன், சௌந்தர்யா
நடித்த

**அம்மன்**

(றீலஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களை பேய்களுக்காக
கொலை செய்யும் சம்பவங்கள்
நிறைந்தது.
(C/11429)



## லிபேட்டி

அச்சுவேலி
இன்று முதல்
சிம்ரன், விஜயசாந்தி
நடிப்பில்

**தலைவி**

(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*
(74706)


தொழில் முயற்சியாளருக்கும் உற்பத்தியாளருக்கும்
ஓர் அரியசந்தர்ப்பம்

## மாபெரும் புதுவருட கைத்தொழில் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

காலம் : 2000 ஏப்ரல் 9 ஆம் 10ஆம் 11ஆம் திகதிகள்
இடம் : யாழ்.மத்திய கல்லூரி

*பங்குபற்றுவோர் :*

* இயந்திர உபகரண உற்பத்தியாளரும் விற்பனையாளர்களும்
* கைவினைப்பொருள் உற்பத்தியாளர்கள் (மட்பாண்டம், சிற்பம், மரவேலை, போன்றவை)
* கனனிவள நிறுவனங்கள்
* உணவுப்பொருள் உற்பத்தியாளர்
* பனைசார் உற்பத்திப்பொருள்கள்
* தோல் உற்பத்திப் பொருள்கள்
* ஆடையணிகள் மற்றும் உள்ளூர் உற்பத்திகள்
* மற்றும் கைத்தொழில் சார் அரச நிறுவனங்கள், வங்கிகள்.

மேற்படி கண்காட்சியில் மேலும் பங்கு பற்ற விரும்புவோர் 31.03.2000 (வெள்ளி) க்கு முன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**கைத்தொழில் அபிவிருத்திச் சபை,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி**
**அதிகார சபைக் கட்டடம் ,**
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**தொழிற்றுறைத் திணைக்களம்,**
கச்சேரி.
யாழ்ப்பாணம். (C/11551)

## பொதுக் கருத்தரங்கு

கருத்தரங்கு: **அமைதிக்கு சுகம் ஒரு பாலம்**

இடம்: யாழ். பல்கலைக்கழகம் நூலக கேட்போர் கூடம்

காலம்: **29-03-2000 பிற்பகல்** 3.00 - 4.30( S.L.T)

பங்குபற்றுபவர்கள்: டாக்டர் செ.சு.நச்சினார்கினியன்
டாக்டர் செ.சி.யமுனானந்தா
டாக்டர் (செல்வி) உமா சிவபாதசுந்தரம்

விளக்கம்: பேராசிரியர் டி.ஜே.சோமசுந்தரம்

* அனைவரும் வருக *

செயலாளர்
*யாழ். விஞ்ஞான சங்கம் (மருத்துவ பிரிவு)*
(74877)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 08 - 1916



உதிர்வு 10 - 04 - 1999

அமரர்

## செல்லையா அழகரத்தினம்

(முன்னாள் அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்)

*திதி:- 29-03-2000*

எம்மை விட்டு பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும்
இன்று உங்களை எண்ணியே ஏங்கி நாங்கள் தவிக்கின்றோம்.
மீண்டும் உங்கள் குரலை நாங்கள் கேட்பதெப்போ?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

கெருடாவில் வடக்கு,
தொண்டைமானாறு.

பிரிவால் வாடும்
**மனைவி, பேரமகள்**
(74540)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் வடமராட்சி கிளையில்
விரிவுரையாளராக கடமையாற்றும்

**திருமதி தேன்மொழி இராமச்சந்திரன்**

அவர்களின் அன்புத்தந்தை

## செல்லப்பா சின்னத்துரை

அவர்களின் திடீர் மரணத்தை கேள்வியுற்று ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் மரணத்தினால் துயரடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

*இயக்குநர், விரிவுரையாளர்கள்,*
*உத்தியோகத்தர்கள்.*

I.I.S,
யாழ்ப்பாணம். (C/11552)

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனப்

# பேராயர் அதி.வந். கலாநிதி எஸ். ஜெபநேசனின்

## அகவை அறுபது

# நிறைவு விழாச் சிறப்புமலர்

28-03-2000



## ஆழமான பாரம்பரியத்தின் காவலன்

எனது உடன் பணியாளும் நண்பனுமான தென் இந்திய திருச்சபையின் யாழ். திருமண்டலப் பேராயர் பேரருள்திரு. சுப்பிரமணியம் ஜெபநேசன் தனது அகவையில் 60 ஐத் தொடங்கும் இவ்வேளையில் எனது வாழ்த்தையும் அன்பையும் தெரிவிக்கின்றேன். நற்செய்திப் பணியின் பரப்பு தளம் ஆகியவற்றின் விரிவான போக்கினாலும் அதன் நோக்கம் பணியாளரை ஒன்றிணைப்பதாலும் நற்செய்திப் பணி புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது.

தமிழியல் வாழ்வில் பாரிய முன்னெடுப்புக்கும் புதிய சிந்தனைக்கும் ஊற்றாக வட்டுக்கோட்டை அமைந்தது என்பது வரலாற்று உண்மை. இந்த வரலாற்று வேர்களை உங்கள் பல்கலைக்கழக ஆய்வு தெளிவுறக்காட்டியது. இந்த ஆழமான பாரம்பரியத்தின் காவலன் என்பது பெருமைக்குரியதே.

'உதயதாரகை' யில் தங்களின் பங்களிப்பும் இன்னும் சிறப்பாக யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் வளர்ச்சிக்கு அளிக்கும் தங்களின் முன்னெடுப்பும் இக்கால கட்டத்தில் தங்கள் பணியில் சிறப்புற்றதைக் கண்டோம்.

உறுதியான இறை விசுவாசத்துடனும் தளராத நம்பிக்கையுடனும் பணியாற்ற வாழ்வில் இறையருள் வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

பேரருள் திரு
தோமஸ் சௌந்தரநாயகம்
யாழ். ஆயர்

## சமாதானத்துக்காக முழுமூச்சாக உழைப்பவர்

பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்களின் அறுபதாவது அகவை சிறப்பு இதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பேராயர் கல்விப் புலத்திலும் சமயத்துறையிலும் சமூகப் பணியிலும் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நற்பணி புரிந்து தனக்கென முத்திரை ஒன்றைப் பதித்துள்ளார்.

இவர் தமிழ் இலக்கியத்தில் சிறப்பாகக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்தில் மிக்க புலமை பெற்று விளங்குகிறார்.

ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கிய பேராயர் அவர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்தத்துறையில் சேவையாற்றினார். பின் தென்னிந்திய திருச்சபை இலங்கை மண்டலப் பேராயராக நிலை நிறுத்தப்பட்டார்.

அவரும் அவரது குடும்பமும் மகிழ்வுடன் வாழவும் அவரின் பணி தொடர்ந்தும் எமது மக்களுக்குக் கிட்டவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசி அவருக்குக் கிடைப்பதாக.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்.

## ஆன்மீகத் தலைவர்

தொன்மை மிகு தமிழின் காவலன் என தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றிப் போற்றும் தென்னிந்திய திருச்சபையின் யாழ். திருமண்டலப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களின் 60 ஆவது அகவை நிறைவு பெறுவதையிட்டு வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அவலப்பட்டு இந்த மண்ணில் வாழும் மக்களோடு தன்னை இணைத்துக்கொண்டு சமாதானத்துக்காக உரக்கக்குரல் கொடுக்கும் ஓர் ஆன்மீகத் தலைவர் அவர்.

கல்வியே இந்த சமூகத்தின் சொத்து. சூழ்நிலைகள் அதனை அழிக்க இடங்கொடுக்கக் கூடாது எனப் பறைசாற்றும் ஒரு கல்விமான் அவர். மக்களைக் காணவும் அவர்களின் இன்னல்களோடு கலந்து கொள்ளவும் பயணங்களைச் சலிப்பின்றி மேற்கொள்பவர். ஏங்கிப் பரிதவித்துநிற்கும் இந்தச் சமூகத்தின் விடிவுக்காக பல்வேறு தோற்றங்களில் செயல்பட்டு வரும் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் நீடூழி வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி

## சாலச் சிறந்த மகன்!

செந்தமிழும் ஆங்கிலமும் சேர்ந்தே விளைச்சலுறும்
சிந்தைவயற்பரப்பின் சிறப்புழவன்! அறிவுலகச்
சந்தை எங்களுந்தன் 'சாதனை'யைக் கடைவிரித்தே
கல்வித்துறைவல்லார் கருத்தில் நிலைத்தவனாய்ந்
கடவுட்பணியதிலும் கால் பதித்த 'பேராயன்'!
'நூல் என்னும் பேராற்றுள்' நொடிக் கொருகால்மூழ்கி
ஆழச்சுழியோடி அறிவாரம் எடுப்பதிலும்;
காலத்தைப் பொன்போலக் கருதிப்பணி செய்தே
'வெற்றிக்கனி' பறித்து வியப்போங்கச் செய்வதிலும்
'சாலச் சிறந்த மகன்'!

ஜெ. கி. ஜெயசீலன்

## அறிவின் சிகரம் அடிகளார்

ஆன்று அவிந்து அடங்கிய சான்றாண்மையாலும் கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையினாலும், சமய ஒழுக்கத்தினாலும் என்முன் இன்று அறிவின் சிகரமாகக் காட்சி தருபவர் கலாநிதி ஜெபநேசன் அடிகளார் அவர்கள். மடை திறந்தாற் போன்று அழகொழுகப் பேசும் இவருடைய வல்லமையை நான் பல தடவைகள் மனமாரப் பாராட்டியுள்ளேன். சங்க இலக்கியம் தொடக்கம் இக்கால இலக்கியம் வரை தண்ணீர் பட்ட பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளார் இவர்.

சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

## இனிதே பணியாற்றும் பேராயர்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களுக்கு அகவை அறுபது ஆகிறது என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டேன். கல்வி, புலமை, ஆய்வு, அறிவுத்தேட்டம் முதலானவைகளில் யாழ்ப்பாணத்தை ஓர் 'அசுரப்பாய்ச்சல்' பாய வைத்தவர்கள் அமெரிக்க மிஷனரிமார். 19 ஆம் நூற்றாண்டிலே தமிழ் கூறும் நல்லுலகில் யாழ்ப்பாணம் உயர்ந்து நின்றமைக்கு உந்து சக்தியாக அமைந்த, ஒரு வரலாற்றுப் பெருமை மிக்க நிறுவனத்தின் தலைவராக இருந்து இனிதே பணியாற்றும் பேராயரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்

## நல்ல ஆசிரியர், நல்ல அறிஞர்

பேராயர் அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் இன்று அகவை அறுபதை அடைகிறார்.

பேராயர் ஜெபநேசன் ஒருநல்ல ஆசிரியர்; நல்ல அறிஞர்; நல்ல கல்வியாளர்; நல்ல நண்பர்; நல்ல ஆயர். புலமைப் பணிக்கும் இறைபணிக்கும் தன்னை அர்ப்பணித்துள்ள பேராயர் ஜெபநேசன் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து தன்பணி தொடர இறையாசிகளை வேண்டுகின்றேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## பல்லாண்டு வாழவேண்டும்

யாழ்ப்பாணம் தென் இந்தியத் திருச்சபை ஆயர் மேதகு ஜெபநேசன் அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். இறைவனின் பிரதிநிதியாக மக்களின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர் ஆயர் ஜெபநேசன் அவர்கள்.

மக்களுக்கு வேண்டிய அனைத்துப் பணிகளையும் செவ்வனே ஆற்றிக் கொண்டிருக்கும் தென் இந்தியத் திருச்சபையின் தலைவராக விளங்கும் ஆயர் ஜெபநேசன் அவர்கள் அறுபதாவது அகவையை நிறைவு செய்வதுமகிழ்ச்சியைத்தருகிறது. தொடர்ந்தும் இப்பணியில் ஆயர் ஜெபநேசன் அவர்கள் ஈடுபட்டு மக்கள் தொண்டின் மூலம் இறை அருளைப் பெற்று பல்லாண்டுகாலம் வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
2 ஆவது குருமஹா சந்நிதானம்

## சேவை தொடரட்டும்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். திருமண்டலப் பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் 60 ஆவது அகவை அடைவதையிட்டு வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் பாரம்பரியத்தைப் பேணுவதற்கு உறுதுணையாக இருக்கும் பேராயர் அவர்கள் கல்லூரி ஆளுநர் சபையின் தலைவராகவும் இருந்து வழிப்படுத்தியுள்ளார்.

ஆடம்பரமான விழாக்களை எடுப்பதை விரும்பாத பேராயர் அவர்கள் நலிவுற்று நொந்து போய் இருக்கும் வன்னிப் பெருமக்களோடு தனது 60 ஆவது அகவைப் பூர்த்தியைக் களித்துக் கொண்டிருப்பது அவரின் சமூக மனப்பான்மை எடுத்துக் காட்டுகின்றது. அவர் நீடூழி வாழ்ந்து அவரது சேவை மக்களுக்குக் கிடைக்க இறைவனை இறைஞ்சி நிற்கிறேன்.

ஏ. ஏ. போல்
அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி.

## இறைஆசி கிடைக்குக!

அறுபதாவது அகவைக்குள் பிரவேசிக்கும் எமது திருச்சபையின் பேராயரும் எமது கல்லூரியின் அதி முதல்வராகவும் விளங்கும் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களை உடுவில் மகளிர் கல்லூரியின் சார்பில் எல்லா நலத்துடனும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பேராயருக்கு நல்ல பலத்தையும் சுகத்தையும் கொடுக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் பணிகள் சிறப்புடன் தொடர இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

கலாநிதி சி. வி. செல்லையா
அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி

## டிறிபேக் கல்லூரியின் தவப்புதல்வர்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் தவப்புதல்வனும் பழைய மாணவனும் எமது கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியர்களாக சேவையாற்றிய திரு. திருமதி சுப்பிரமணியம் அவர்களின் அன்புமகனும் கடவுளின் ஆசீர்வாதத்தோடு மனிதகுலத்தின் உயர்வுக்காகச் சேவையாற்றி வருபவருமான அதி வண. கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் ஆண்டகை தங்களை எங்கள் டிறிபேக் கல்லூரிச் சமூகம் வாழ்த்துகின்றது.

இறைத்தொண்டுடன் தமிழ்த் தொண்டும் ஆற்றிவரும் தாங்கள் இறைவனின் அருள் பெற்று தங்கள் பணிகள் மேலும் சிறப்புற இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

மு. நாகேந்திரராசா
அதிபர்,
டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

அடிகளே நீடூழி வாழ்க

(சி/11539)

# மாகாண சபையால் முதற் கட்டமாக 20 ஊழியருக்கு கணனிப் பயிற்சி

திருகோணமலை, மார்ச் 28

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

ஏப்ரல் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பில் முதற்கட்டமாக 20 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வடக்கு – கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக அதன் பணிப்பாளர் ஜனாப் எம். ஏ. சீ. முகைதீன் தெரிவித்தார்.

மூன்று வாரங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறி முடிவுற்றதும் மற்றுமொரு 20 பேரைக் கொண்ட இரண்டாவது குழுவுக்கு பயிற்சி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாகப் பயிற்சி வழங்கப்படவுள்ள 20 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ எம். எஸ். சரவணபவ — சாவகச்சேரி பட்டின சபை,

★ செல்வி ஆர் இராஸ்ரீ — வலி. கிழக்கு பிரதேச சபை,

★ எஸ். சிவனேசன் — செல்வி ஜே. தளயசிங்கம்— யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,

★ வீ. ரவீந்திரன் — தென்மராட்சி கல்வி வலயம்,

★ ரீ. ஸ்ரீதரன் — நல்லூர் பிரதேச சபை,

★ செல்வி கே. காயத்திரி— நல்லூர் பிரதேச சபை,

★ எஸ். இராசநாயகம் — ஊர்காவற்றுறை பிரதேச சபை,

★ செல்வி எஸ். ஜசோதா — வேலணை பிரதேச சபை

★ செல்வி எஸ். தவயோகராசா—யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,

★ செல்வி கே. சபாரட்ணம் — யாழ். கால் நடை உற்பத்தியும் சுகாதாரமும்,

★ வீ. சிவம்—யாழ். மாநகர சபை,

★ எஸ். சிவப்பிரகாசம்— பளை பிரதேச சபை,

★ எஸ். பீ தில்லைநாதன்- வேலணை பிரதேச சபை'

★ செல்வி ஐ. பீ. ஜினூான்ற்- யாழ். சுகாதார, திணைக்களம்,

★ வீ. கைலாயபதி — நீர் வழங்கல் சபை,

★ கே. விஜயகுமார்—வலி. வடக்கு பிரதேச சபை,

★ எம். சுமதி—வலிகாமம் கல்வி வலயம்,

★ பீ. பாலசிங்கம்—யாழ் கமநல சேவை திணைக்களம்,

★ எஸ். சிவனேசன்— விவசாயத் திணைக்களம்.

வகுப்புகள் யாவும் திருநெல்வேலியில் உள்ள டீ. சி. எஸ். நிறுவனத்தில் இடம்பெறவுள்ளன, (இ 9)

## பல்கலை மாணவர் கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு மாணவர்கள் (பொது நிர்வாகம்) நேற்று முன்தினம் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் சென்ற இந்த மாணவர் குழுவில் 50 பேர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற இவர்கள் விவசாயம் மற்றும் நிர்வாகம் சார்ந்த பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தென்மராட்சிப் பிரதேசச் செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் சாவகச்சேரியில் நடைபெற்ற களப்பயிற்சி ஒன்றிலும் இவர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## பெண்ணுக்கு ஏற்பட்ட ஏமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் செல்வதற்காக நகைகளுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த வயோதிபப் பெண் ஒருவர் நகைகளை எடுத்துச்செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த வயோதிபப் பெண் அண்மையில் சுவிற்சர்லாந்து சென்று கொழும்பு திரும்பி இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது உறவினர்களுக்கு வழங்குவதற்காகத் தங்கச் சங்கிலிகள், காப்புகள், தோடுகள், கைச்சங்கிலிகள் போன்றவற்றைக் கொண்டுவந்திருந்தார்.

யாழ்ப்பாணம் செல்வதற்காக இந்த நகைகளுடன் இவர் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்தபோது இதனைச் சோதனைசெய்த படையினர் நகைகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை.

அங்குள்ள அதிகாரிகளைக் கையெடுத்துக் கும்பிட்டும் அவர்கள் இரங்கியதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் நகைகளைக் கையளிப்பதற்கு ஒருவரும் இல்லாத நிலையில் இவர் தமது பயணத்தைக் கைவிட்டுக் கொழும்பு திரும்பிச் சென்றார்.(இ-5-175)

## மருதடி விநாயகர் கொடியேற்றம்

மானிப்பாய், மார்ச் 28

சரித்திரப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி அருள்மிகு ஸ்ரீ விநாயகர் திருக்கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து நண்பகல் 12-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 18 தினங்கள் காலை, மாலை உற்சவம் இடம்பெறும்

ஏப்ரல் 12 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும், ஏப்ரல் 13 ஆம் திகதி வியாழக்கிழமை "விக்கிரம வருடம்" பிறப்பு அன்று நண்பகல் 12.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் 14ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவமும், திருவூஞ்சல், சண்டேஸ்வரர் உற்சவமும் விசேட உற்சவங்களாக நடைபெறும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரம்மஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்களின் 'திருவிளையாடல் புராணம்' தொடர் சொற்பொழிவு உற்சவ தினங்களில் மாலை வேளையில் இடம்பெறும். [ஐ-30-135-152]

## வெளியிணைப்பு இயந்திரங்கள் அபகரித்துச் செல்லப்பட்டன.

திருகோணமலை, மார்ச் 28

திருகோணமலைத் திருக்கோணேஸ்வர ஆலய கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த முஸ்லிம் மீனவர்களின் படகுகளிலிருந்து எட்டு வெளியிணைப்பு இயந்திரங்கள் விடுதலைப் புலிகளினால் பறித்துச் செல்லப்பட்டுள்ளன என்று திருமலைப் பொலீஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இயந்திரத்துக்கும் 10 ஆயிரம் ரூபா கப்பம் கேட்டு இந்த இயந்திரங்கள் பறித்துச் செல்லப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-145)

## ஆரம்பப்பிரிவு ஆசிரியருக்கான நாடகக் களப்பயிற்சி

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பபிரிவு ஆசிரியர்களுக்கான ஆரம்பக் கல்வி நாடகக் களப்பயிற்சி 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் காலை 9-00மணி முதல் மாலை 4-30 மணி வரை நடைபெற்றது.

தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி பயிற்சிப் பட்டறையில் 53 ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். அரங்கச் செயற்பாட்டுக் குழுவினால் மேற்படி ஆசிரியர்களுக்குத் தேநீர் சிற்றுண்டி, மதியபோசனம் என்பன வழங்கப்பட்டன.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் பயிற்றுநர்களாக குழந்தை ம. சண்முகலிங்கம் செயலாளர் தேவானந், செல்வி ஜெயந்தி, ஆசிரியர் கமலநாதன் மற்றும் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் துறைசார் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

இறுதிநாள் நிகழ்வில் ஆசிரியர்கள் நான்கு குழுக்களாக பிரிந்து தாம் பழகிய நாடகங்களை மேடையேற்றிக் காண்பித்தனர். இந்த நிகழ்வில் தென்மராட்சிக் கல்விக் வலய கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்களப்பயிற்சி முடிவில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் நாடக களப் பயிற்சியை இரண்டு பிரிவுகளாக — வதிவிடப் பயிற்சியாக, நடத்த யாழ். நாடக அரங்கியல் குழுவினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இதனை ஏப்ரல் இறுதி வாரத்திலும் மே நடுப்பகுதியிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குடும்பப் பெண் காயம்

வவுனியா, மார்ச் 28

முருங்கன் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை கதிராசிப்பிள்ளை (வயது 52) என்பவரே காயமடைந்தவர் ஆவார். இவர் தற்பொழுது வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

அதேசமயம் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கண்டு தாம் இப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5-164)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் க. சி. செல்லப்பா

(தாமோதரா ஸ்ரோர்ஸ், உரிமையாளர் - மன்னார்)

மண்ணில்: 18-11-1918
விண்ணில்: 09-04-1999

வையத்துள் நாமெல்லாம் வாழ்வாங்கு வாழ
வழிசமைத்து
மெய்யதனை எமக்காக மெழுகுதிரியாக்கி
அன்பும் பண்பும் ஒன்று சேர எமையெல்லாம்
- அரவணைத்து
விண்ணதனை திடீர் என நாடிய உங்களை
எப்படித்தான் இந்த மண்ணில் மறந்து வாழ முடியும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(74795)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### வெள்ளையர் கந்தையா (முருகப்பா)

தோற்றம் 10-07-1945
மறைவு 09-04-1999

திதி: 28-03-2000

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

குப்பிளான் தெற்கு,
ஞானகலா சனசமூகநிலையம்.

(74788)

# ரஷ்ய அதிபர் தேர்தலில் விளாடிமீர் புடின் வெற்றி!

மொஸ்கோ, மார்ச் 28

ரஷ்ய அதிபர் தேர்தலில் வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் தற்காலிக அதிபர் விளாடிமீர் புடின் அதிபர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படவுள்ளார்.

ஏறத்தாழ 92 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் புடின் 52.52 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

புடினை எதிர்த்துநின்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜென்னடி சுகனோவ் 30.77 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

தேர்தலில் இரண்டாவது சுற்றினைத் தவிர்ப்பதன் மூலம் பதில் ஜனாதிபதி விளாடிமீர் புடின் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது வரை வாக்குகள் எண்ணப்படாத இடங்களில் புடினுக்குக் கணிசமான ஆதரவு இருப்பதாகவும் இத்தேர்தலில் 68 சதவீதமான மக்கள் வாக்களித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை —

ரஷ்யாவின் தென்பகுதி நகரமான தஜிகிஸ்தானில் நேற்று முன்தினம் பாரிய குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்ந்துள்ளது.

வாக்களிப்பு பூர்த்தியான சில மணி நேரத்திலேயே இக்குண்டு வெடித்ததாகவும்.

ஹோட்டல் ஒன்றுக்கு அருகே நின்ற கார் ஒன்றிலேயே இந்தக் குண்டு வைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது

செச்சினியத் தீவிரவாதிகளே இதனை மேற்கொண்டிருக்கலாம் என ரஷ்யப் பாதுகாப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## காஷ்மீரில் சீக்கிய கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு

ஜம்மு, மார்ச் 28

காஷ்மீரில் உள்ள நூற்றைம்பது சீக்கியக் கிராமங்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி ஜம்மு — காஷ்மீரின் அனந்தநாத் பகுதியில் இடம்பெற்ற கோரச் சம்பவத்தைத் தொடர்ந்தே இப் பகுதிக்கு பாதுகாப்பு வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது 35 சீக்கிய இனத்தைச் சேர்ந்த ஆண்கள் இனம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தின் நிலைமையை நேரில் மதிப்பிடச் சென்ற உள்துறை அமைச்சர் பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் மத்தியில் பேசும் போது பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

அத்வானியுடன் ஆளுநர் மற்றும், முதலமைச்சர் டாக்டர் பாரூக் அப்துல்லா மற்றும் படை அதிகாரிகள் சென்றனர். ((இ-க-9)

# நம்பிக்கை வாக்கெடுப்பில் சண்முகம் வெற்றி பெற்றார்

## காங்கிரஸ் - த. மா. கா. கூட்டணி அரசு தப்பியது

சென்னை, மார்ச் 28

பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர் பி. சண்முகம் நேற்று சட்டப் பேரவையில் இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றார்.

முப்பத்துமூன்று பேர் கொண்ட சட்டப் பேரவையில் 20 பேர் முதலமைச்சருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இவர் கடந்த புதன்கிழமை முதலமைச்சராகப் பதவியேற்றார்.

நேற்று சபை கூடியதும் குரல்வாக்கு மூலம் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாண்டிச்சேரியில் ஆட்சியில் இருந்த தி. மு. க அரசுக்கான ஆதரவை அதன் கூட்டணிக் கட்சியான த. மா. கா விலக்கிக் கொண்டதை அடுத்துஇருவாரங்களுக்குமுன் தி. மு. க கூட்டணி அரசு இராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

தி. மு. க வின் இராஜினாமாவைத் தொடர்ந்து அங்கு காங்கிரஸ், த. மா. கா., அ. தி. மு. க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இணைந்து கூட்டணி அரசை அமைத்துள்ளன.

நேற்று சட்டப் பேரவை கூடிய போது முதலமைச்சர் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.

(இ-க-9)

## கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு

# 180 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

சென்னை, மார்ச் 28

கோயம்புத்தூர் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 180 பேருக்கும் எதிரான குற்றப்பத்திரிகை நகல் அவர்களுக்கு வழங்கப்படும்.

தடை செய்யப்பட்டுள்ள அல் உமா அமைப்பின் தலைவர் எஸ். ஏ. பாட்ஷா மற்றும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் அப்துல் மஷார் மதானி ஆகியோர் இவர்களில் அடங்குவர்.

பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ள இவர்கள் கோயம்புத்தூர் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு அங்கு குற்றப்பத்திரிகை நகல்கள் அவர்களிடம் கையளிக்கப்படும்.

இவர்களை நேற்று கோயம்புத்தூர் அழைத்து வருவதற்காகப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கோயம்புத்தூரை உலுக்கிய குண்டுவெடிப்புக்களில் 58 பேர் வரை கொல்லப்பட்டனர் இரு நூறுக்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

(இ-க-9)

## காஷ்மீருக்கு வடக்கே 20 மணி நேரம் மோதல்

புதுடில்லி, மார்ச் 28

காஷ்மீருக்கு வடக்கே அண்டுவாராவில் இந்திய இராணுவத்தினருக்கும் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையே இருபது மணி நேர மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது இஸ்லாமியக் கிளர்ச்சியாளர் மூவர் கொல்லப்பட்டதுடன் இராணுவ மேஜர் ஒருவரும் வேறு ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

'முஜாஹுதீன் வஸ்கர் தைபா' என்ற அமைப்பைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாதிகள் கடந்த சனிக்கிழமை முதல் அண்டுவாராவில் உள்ள மசூதி ஒன்றில் மறைந்திருந்தனர். அவர்களைக் கைது செய்யும் நோக்குடன் இராணுவத்தினர் மசூதியைச் சுற்றிவளைத்த போதே மோதல் வெடித்தது.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளிடம் இருந்து பிக்காஸ் பீரங்கி ஒன்றும் இரண்டு ஏ. கே. ரவைகளும் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-க)

## எனது நீண்ட நாள் ஆசை இன்று நிறைவேறுகின்றது

### தாஜ்மஹாலில் கிளின்ரன் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 28

தாஜ்மஹாலைப் பார்ப்பது தமது நீண்ட நாள் கனவு என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தனது ஐந்துநாள் இந்திய விஜயத்தின் போது தாஜ்மஹாலுக்குச் சென்றவேளை கூறினார்.

தாஜ்மஹாலைப் பார்வையிட்டமை தனக்கு மிகுந்த மகிழ்ச்சி தருவதாகக் கூறிய கிளின்ரன் சூழல் மாசடைவதால் தாஜ்மஹாலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கு மனம் வருந்துவதாகவும் கூறினார்.

இந்தியாவில் உள்ள ஆக்ராவில் 17 ஆம் நூற்றாண்டில் மன்னர் ஷாஜஹானால் மனைவி மும்தாஜின் நினைவாக தாஜ்மஹால் கட்டப்பட்டது.

சூழல் மாசடைவதால் தாஜ்மஹாலின் கற்களுக்கே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அப்படியானால் சிறார்களுக்கு சூழல் மாசடைதல் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் வினா எழுப்பினார்.

மும்தாஜின் உடல் வைக்கப்பட்டிருந்த அறையையும் அதிபர் கிளின்ரன் பார்வையிட்டார். 91 ஆம் ஆண்டுக்குப் பின்பு அதனைப் பார்வையிட அதிபர் கிளின்ரனுக்கு மாத்திரமே தற்போது அனுமதி வழங்கப்பட்டது. (இ-19)

## உலக அரங்கில்

### ஈராக்கில் நாடாளுமன்றத் தேர்தல்

பாக்தாத், மார்ச் 28

ஈராக்கின் நாடாளுமன்றத் தேர்தலில் முதல் முறையாக அதிபர் சதாம்ஹுசேனின் மகன் போட்டியிடுகிறார்.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நேற்று நடைபெற்றன.

இத் தேர்தலில் 92 லட்சம் மக்கள் 512 வேட்பாளர்களில் இருந்து 220 பேரைத் தெரிவு செய்யவுள்ளனர்.

வேட்பாளர்களில் 25 சதவீதமானோர் ஆளும் பாத் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் சுயேச்சை வேட்பாளர்கள்.

(இ-க-9)

### பல லட்சம் சொத்துக்கள் தீயில் நாசம்

சென்னை, மார்ச் 28

இந்தியாவின் திருப்பூர் மாவட்டத்தின் கர்வம் பாளையம் எனும் இடத்தில் உள்ள பஞ்சுக் கழிவுப்பொருள் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிந்துள்ளன.

தீ அருகில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கும் பரவியதால் சேதம் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தீப்பிடித்ததற்கான காரணம் என்ன என்பதும் இதனால் ஏற்பட்ட உயிரிழப்புப் பற்றியும் இது வரை தகவல் கிடைக்கவில்லை.

[இ-க-9]

### நல்லெண்ண விஜயம்

புதுடில்லி, மார்ச் 28

இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே பாதுகாப்புத்துறையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் மூன்று இந்தியப் போர்க் கப்பல்கள் ஆயிரத்து 400 அதிகாரிகளுடன் இஸ்ரேல் சென்றுள்ளன.

ஐ. எம். எவ் சக்தி, ஐ. எம். எவ். கோமதி, ஐ எம். எவ். ரண்வீக் ஆகிய இந்த மூன்று கப்பல்களின் நல்லெண்ணப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க உதவும்.

இந்தப் பயணத்தின் போது இந்தியாவின் உயர் நிலைக் கடற்படை அதிகாரிகள், மூத்த இஸ்ரேலியப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர். (இ-க-9)

### இராஜினாமா

தாய்வானின் தேசிய வாதக் கட்சியின் தலைவர் லீரெங் ஹுய் கடந்த வெள்ளியன்றுஇராஜினாமாச்செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சி மோசமான தோல்விகளைத் தழுவியதை அடுத்து அங்கு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதன் விளைவாகவே அவர் இராஜினாமாச்செய்தார் எனவும் கூறப்படுகின்றது. [க-9[

### விருதுகள்

அமெரிக்காவின், 'வியூசி' என்ற படம் இந்த வருடத்துக்கான ஒஸ்கார் விருதைப் பெற்றுள்ளது.

சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர் ஆகியோருக்கான விருதுகளும் இந்தப் படத்துக்குக் கிடைத்துள்ளன.

(இ-க-9)

★ ★ ★

இந்தியாவில் பெரியம்மை நோயை அடியோடு ஒழிப்பதற்கு செயலாற்றிய டாக்டர் சுப்பிரமணியத்துக்கு எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துள்ளது.

பெரியம்மை நோயை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்ட இவரின் அரிய பணிக்காக இந்திய மருத்துவ சேவைக்கான பி. சி ராய் பதக்கத்தை மத்திய அரசு இவருக்கு வழங்கியுள்ளது.

(இ-க-9)

# இஸ்ரேல் - சிரிய சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பு இல்லை!

வாஷிங்ரன், மார்ச் 28

இஸ்ரேல்—சிரிய அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கான எந்த ஓர் உடன்பாடும் காணப்படாத நிலையில் அமெரிக்க — சிரிய உயர்நிலைக் கூட்டம் முடிவுற்றது.

நேற்று முன்தினம் மாலை அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்கும் சிரியத் தலைவர் ஹபேஸ் அல் அஸாத்துக்கும் இடையே ஜெனிவாவில் உயர் நிலைக் கூட்டம் நடந்தது. அதன்போதே இஸ்ரேல் — சிரியப் பேச்சுக்களைத் தொடர்வதற்கான உடன்பாடு காணப்படவில்லை.

இந்த உச்சநிலைக் கூட்டத்தில் இரு நாடுகளும் தமது பிணக்கினைத் தீர்த்துக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து தெளிவாக ஆராயப்பட்டதாகவும் —

சிரிய அதிபருடனான பேச்சுக்களினால்தான் மனநிறைவு அடைந்திருப்பதாக கிளின்ரன் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை — சமாதான நடைமுறைகளை ஆரம்பிக்கும் போது இஸ்ரேல் ஏதோ ஒரு வழியில் தடைகளை முன்வைக்கின்றது என சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

1967 ஆம் ஆண்டு இஸ்ரேல் சிரியாவிடம் இருந்து கைப்பற்றிய கோலான் மலைக் குன்றுகளைச் சிரியாவிடம் மீளக் கையளிப்பது தொடர்பாகவே இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையே முட்டுக்கட்டை நிலை தோன்றியது.

நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடந்த டிசெம்பரில் மீண்டும் ஆரம்பமாகின. ஆனால் அதுவும் முறிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-க-9)

## வாசகர் திருமுகம்

### பட முடியாது இனித் துயரம்

யாழ். நகரத்தின் இருதயத்தில், குடிசனச் செறிவுள்ள பகுதியில் பாங்சால் வீதி அமைந்துள்ளது. யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் போக்குவரத்து நிறைந்த பல வீதிகளில் இதுவுமொன்று. பல வருடங்களாக பொறுப்புள்ள மனிதர்களின் திருப்பார்வை படாமல், தேடுவாரற்ற நிலையில் குண்டும் குழியுமாக இவ் வீதி காட்சியளிக்கின்றது. சாதாரண காலங்களில் சைக்கிளில் செல்பவர்களையும், வாகன மோட்டிகளையும் அவலத்திற்குள்ளாக்கும் இவ்வீதி, பாதசாரிகளையோ இப்போது படாதபாடுபடுத்துகின்றது. வீதி எது, பக்கத்து வெறுந்தரை எது என்ற வித்தியாசமே புரியாமல் மறைந்திருக்கும் கிடங்குகளில், விழுந்து எழும்பி விபத்தில் சிக்கும் பலரை இவ்வீதியில் அடிக்கடி காணமுடிகின்றது. யாழ். புனித மரியாள் பேராலயம், புனிதயாகப்பர் ஆலயம், புதுமை மாதா ஆலயம் போன்ற வழிபாட்டிடங்களுக்குச் செல்லும் பக்தர்களும், புனித பத்திரிசியார் கல்லூரி, புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் முதலிய கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களும் இவ்வீதியைத் தான் உபயோகிக்கின்றார்கள்.

தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு நாலா புறத்திலுள்ள மக்களும் தினமும் வந்து கூடுகின்ற சின்னக்கடைச் சந்தையும் இவ்வீதியில் தான் அமைந்துள்ளதென்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அருகிலுள்ள வடிகால்களில் மழைகால நீர் நிறைவதாலும், குண்டுகளில் நீர் தேங்கி நிற்பதாலும் வீதிப் பாவனையாளர் படுந்தொல்லை சொல்லுந்தரமன்று. வாகன ஓட்டத்தால் பாடசாலை மாணவர்களின் உடைகள் அழுக்காவதோடு, வீதியால் பயணிக்கும் ஏனையவர்களும் அவஸ்தைக்குள்ளாவதைத் தொடர்ந்து அவதானிக்க முடிகின்றது.

நாட்டு நிலைமையால், வீதியிலுள்ள வடிகால்கள் நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமலிருப்பதால் சுற்றுச் சூழல் பாதிப்படைந்து, நுளம்புப்பெருக்கத்தால் அப்பகுதி மக்கள் மலேரியா, டெங்குக்காய்ச்சல் போன்ற நோய்களுக்குள்ளாகும் பரிதாபம் வேறு வந்துவிட்டது. சிவில்நிர்வாகம் என்று வானளாவப் பேசப்படும் இவ் வேளையில், பாதிப்புக்குள்ளாகும் மக்களின் பொது நலனைக்கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் இவ்வீதியைத் திருத்த இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா?

வி. ராசேஸ்

யாழ்ப்பாணம்.

### பரிசோதனைப் பொருள்களா அல்லது பலிக்கடாக்களா?

சென்ற வருடம் 9 ஆம் ஆண்டும் இந்த வருடம் 10 ஆம் ஆண்டும் கல்வி பயிலும் மாணவர்கள் நிலை பற்றி கல்வி உலகுக்குத் தெரியப்படுத்துவது பொறுப்புள்ள பெற்றோர்களின் கடமை ஆகும்.

சென்ற வருடம் 9 ஆம் ஆண்டு கல்வி கற்ற மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் 2 ஆம் தவணை முடிகின்ற வேளையிலேயே விநியோகிக்கப்பட்டன இவ்வருடம் 10 ஆம் ஆண்டு படிக்கின்ற அதே மாணவர்களுக்கு முதலாம் தவணை முடிகின்ற வேளையிலும் முக்கிய பாடங்களான விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சமூகக்கல்வி, பூமிசாஸ்திரம், சுகாதாரம் ஆகிய பாடங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை.

இக்குறைபாடு மாணவர்களை எத்தனை தாக்கங்களுக்கு உட்படுத்தும் என்பது எவருக்கும் விளங்கும். இம் மாணவர்கள் சமூகத்துக்கு செய்த துரோகம் தான் என்ன? அவர்களுடைய கல்வித் தரம் பாழ்பட்டுப் போய்க் கொண்டிருப்பது கல்விச் சமூகத்துக்குத் தெரியவில்லையா?

யாழ்ப்பாண மாவட்டத்தின் தேசிய பாடசாலைகளில் கூட (தரம்7, 9. 10) திட்டமிட்ட முறையில் பாடவிதானங்கள் கற்பிக்கப்படுகின்றனவா? என சந்தேகிக்கத் தோன்றுகிறது. உதாரணமாக ஆங்கிலம், விஞ்ஞானம் என்பவை ஆசிரியர்களின் சுயஎத்தனிப்புக்கள் மூலம் பாட அலகுகள் கற்பிக்கப்படுகின்றன. இதனால் யாழ். மாணவர் சமூகத்தில் ஒரே தரமான கல்வியைப் போதிப்பது நிர்ணயம் [Standard] அற்றுப் போகிறது. பிள்ளைகளின் நிலைபற்றி பெற்றோர் அவதானிப்பதற்கு பாடப் புத்தகங்கள் கைவசம் இல்லாதது பெரும் குறைபாடாகும்.

புதிய பாடத்திட்டங்களைத் தயார் செய்தபின்னரே பழைய பாடத்திட்டத்தை நிறுத்தி இருக்க வேண்டும்; பழைய பாடத்திட்ட அடிப்படையில் இம் மாணவர்கள் கற்றிருந்தால் எத்தனையோ அத்தியாயங்களை இதுவரையில் பூர்த்தி செய்திருப்பார்கள். இக் காலத் தவணைகளில் பழைய பாடத்திட்டத்தில் இரசாயனம், உயிரியல்] போன்ற கற்கை நெறிகள் பல முடிந்திருக்கும் ஆனால் இரசாயனம், சிறிது இடம் பெறாமலும், உயிரியல் அற்பமாகவுமே போதிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் மாணவர் தரம் என்னாவது.

திட்டம், திட்சண்யம் அற்ற நடவடிக்கைகள் கல்வியிலும் புகுந்து கொண்டதை எண்ணி எந்தப் பெற்றோரும் கவலைப்படாது இருக்க முடியாது. இப்படியான அசட்டுத் தனங்களால் கல்விக் கூட்டங்கள் கோமாளிக் கூட்டங்களாகி விடுமா என்பதே வேதனை.

வெள்ளையர்கள் எம்மை ஆய்வுப் பிராணிகளாக நினைக்கிறார்களோ என்னவோ எமது மாணவர்களை எம் அதிகாரிகள் ஆய்வுப் பொருளாகக் கணிக்க வேண்டாம். திட்டத்தின் அடிப்படையில் வழிநடத்துங்கள்.

மாணவர்களின் 11 ஆம் ஆண்டு பாடப்புத்தகங்களை இப்போதிருந்தே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயார்ப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நா. விஸ்வலிங்கம்

மானிப்பாய்.

# குடாநாட்டில் முழு மூச்சாக மிதிவெடி அகற்றும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் தற்பொழுது முழுமையான அளவில் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிபுணர்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மோப்ப நாய்களின் உதவியுடன் மிதிவெடி அகற்றும் கருவிகளும் பயன்படுத்தப்பட்டு ஒரே நேரத்தில் பல பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் 68 ஆயிரத்து 574 சதுர மீற்றர் பரப்பளவில் மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரையும் 577 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்றும் தொடர்ந்து மிதிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மிதிவெடி அகற்றும் இடங்கள் தொடர்பான வரைபடங்களைத் தயாரிப்பதற்கான நிபுணரும், இவற்றைக் கணனிப் படுத்தும் நிபுணரும் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உடுவில், யாழ்ப்பாணம் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சங்கானை போன்ற இடங்களில் மிதிவெடிகளை அடையாளம் காண்பது தொடர்பான ஆய்வுப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் இப்பகுதிகளில் மிதிவெடி அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (இ-5)

### காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், மார்ச 28

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஸ்ரீவேஸ்வரா நாளை புதன் கிழமை காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் அவர்களின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (இ-10)

# குப்பிளான் வடக்குப் பிரதேசத்தில் மக்கள் பெருமளவில் மீளக்குடியமர்வு

## மின்சாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்தகால இடம்பெயர்வின் பின்பு குப்பிளான் வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களில் குடியமர்ந்து வருகின்றனர்

மீளவும் அவர்கள் குடியமர்வதற்குரிய அனுமதி கடந்த 99 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

எனினும் தமது காணிகளையும் சுற்றுப்புறங்களையும் துப்புரவு செய்து தற்பொழுதே படிப்படியாக இவர்கள் குடியமர்ந்து வருகின்றனர்.

அத்துடன் மீளக்குடியமர்ந்தோர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருவதோடு மற்றும் சிறுகைத்தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் மீண்டும் குடியமரத் தொடங்கியதைத்தொடர்ந்து இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது இதற்கான நடவடிக்கைகளில் சுன்னாகம் மின்சாரசபை ஈடுபட்டு வருவதுடன் முதற்கட்டமாக மின்கம்பங்கள் நடும் வேலைகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை மக்கள் குடியமர்ந்து வருவதைத் தொடர்ந்து அங்குள்ள வீடுகளிலும் காணிகளிலும் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் பெருமளவு குறைந்துள்ளன. (இ-10-133)

# கொடிகாமம் மத்திய மருந்தகம் கிராமியவைத்தியசாலையாக உயரும்

தென்மராட்சி, மார்ச் 28

கொடிகாமம் மத்திய மருந்தகம் விரைவில் கிராமிய வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

மத்திய மருந்தகமும் பிரசவ விடுதியுமென இயங்கி வந்த இந்த ஆஸ்பத்திரி தென்மராட்சி கிழக்குப் பகுதிகளான கொடிகாமம், மிருசுவில், உசன் விடத்தற்பளை, கெற்பேலி, அகரம்பகம், எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதி மக்களின் வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்துவந்தது.

இந்த ஆஸ்பத்திரி வளவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் எட்டு லட்சம் ரூபா செலவில் வெளிநோயாளர் பிரிவு நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-117)

### நாய்களுக்கு வலிப்பு நோய்

தென்மராட்சி, மார்ச் 28

தென்மராட்சிப் பகுதியில் நாய்களுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திடீரென வலிப்பு ஏற்பட்டு மூன்று தினங்களில் நாய்கள் மரணமடைந்துவிடுகின்றன என்று கூறப்படுகிறது.

கச்சாய், மிருசுவில் பகுதிகளிலேயே பெருமளவு நாய்கள் இறந்துள்ளன. [இ-117]

### சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆலய தரிசனத்துக்குச் சென்ற ஒருவரின் பூட்டி வைக்கப்பட்ட சைக்கிள் ஆலயப் பகுதியில் வைத்துத் திருட்டுப் போனது.

வடமராட்சி வல்லிபுரக் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு தரிசனத்துக்கு சென்றவரே சைக்கிளைப் பறிகொடுத்தவர் ஆவார். அவர் அங்கு பிள்ளையார் கோயில் முகப்புப் பகுதியில் உள்ள மரத்தின் கீழ் சைக்கிளை வைத்துப் பூட்டி விட்டு ஆலயத்தைச் சுற்றி வழிபட்டு விட்டு வந்தபோது சைக்கிள் திருட்டுப்போயிருந்தது தெரிய வந்தது. (இ-15)

### மின்னல் தாக்கி வீடு சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று அதிகாலை பெய்த பெரு மழையின்போது ஏற்பட்ட இடிமின்னலினால் ஒரு வீடு பலத்த சேதம் அடைந்தது.

வீட்டில் இருந்தவர்கள் மின்னல் தாக்கி தூக்கி வீசப்பட்டனர். தெய்வாதீனமாக காயமெதுவுமின்றி அவர்கள் தப்பித்துக்கொண்டனர்.

பண்டத்தரிப்பு அன்ரனிஸ் லேனில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-15)

### நியமனம்

நெடுந்தீவு, மார்ச் 28

அனலைதீவு ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாகச் செல்வி நாகராசா ஜீவலதா நியமிக்கப்பட்டுள்ளார். (க-111)

### பாலபண்டித பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரின் பாலபண்டித பரீட்சை ஏப்ரல் மாதம் ஆரம்பமாக உள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை ஏப்ரல் முதலாம், 2 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதேவேளைபுதியபண்டித, பாலபண்டித வகுப்புகள் ஏப்ரல் 15 ஆம், 16ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

### கலந்துரையாடல்

நெல்லியடி, மார்ச் 28

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய பிரிவில் உள்ள கரணவாய் மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளியன்று கலந்துரையாடல் இடம்பெற்றது.

பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ். செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கரணவாய்ப் பகுதியில் பொது சுகாதார பரிசோதகர் பா. பாலதேவன், குடும்பநல சேவையாளர் செல்வி வாசுகி உட்படப் பலர் கருத்துரை வழங்கினார்கள். [இ-109]

### சாவகச்சேரிக்கு கேபிள் தொலைபேசி

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கேபிள் தொலைத் தொடர்புகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான கேபிள் வயர்கள் மீசாலை வரை ரெலிக்கொம் ஊழியர்களால் பொருத்தப்படுகின்றன.

சாவகச்சேரி தன்னியக்க பரிவர்த்தனை நிலையத்ினூடாக கேபிள் தொலைத் தொடர்புகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# உதயன்

## பாட நூல்-கத்தி

தமிழ்ப் பாட நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகள் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட பிழையான கருத்துக்கள் குறித்துப் பல தரப்புக்களும் எடுத்துக் காட்டிவிட்டன; கண்டனமும் தெரிவித்து விட்டன. கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதம் நடைபெற்ற போது, மீண்டும் இது குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள் உள்ள தமிழ்ப் பாட நூல்களை மாணவர் பாவனையில் இருந்து நீக்கிவிட்டுப் புதிய புத்தகங்களை ஆக்கி விநியோகிக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், தமிழ்க் கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களினதும், தொழிற்சங்க மற்றும் அரசியல்வாதிகளினதும் கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனற்றுப் போயுள்ளன. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதி மொழியுடன் காலம் கரைந்து கொண்டிருக்கிறது. தமிழ் மாணவர் கல்வியும் பாழடிக்கப்படுகிறது.

அனேகமான தமிழ்ப் பாட நூல்களில் ஏகப்பட்ட எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. அதே போன்று பொதுவான தகவல்கள் தவறாகத் தரப்பட்டுள்ளன. மேலும் தமிழர்களின் வரலாற்றை மறைக்கும் தகவல்களும் தமிழ் மாணவர்களும் சிங்கள—பௌத்த சூழலில் வளரும் பிள்ளைகள் போன்று பயில வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் பாட அலகுகளும் பாட நூல்களில் நிரம்பவும் காணப்படுகின்றன.

தமிழ் மாணவர்களின் கல்வி இவ்வாறு பாழாக்கப்படுவது தமிழர் வாழ்வியக்கத்தில் மிகப் பெரும் பாதிப்புகளைக் கொண்டு வரும். தமிழ் மக்களின் மிகப் பெரும் சொத்தாக விளங்குவது கல்வி. அத்துறையில் அவர்கள் முன்னேறுவதை, முன்னணி வகிப்பதைத் தடுத்து விட்டால், அவர்களை ஏனைய துறைகளில் பின்தள்ளி வீழ்த்தி விடலாம் என்ற ''இலட்சியம்'' தெற்கு அதிகாரிகளிடம், ஏன் அரசிடமும் இருந்து இன்னும் விட்டுப் போகவில்லை என்பதனையே இந்தப் பாடநூல் விவகாரம் சான்றாக்குகிறது.

எழுபதுகளில் பல்கலைக் கழக அனுமதிக்குத் தரப்படுத்தல் முறை கொண்டு வரப்பட்ட போது மேற்கூறிய '' இலட்சியத்தை'' அடைதல் கிளை பரப்பிப் படர்ந்தது. அதன் தொடர்ச்சியாக தமிழ் மாணவர்களுக்குரிய பாட நூல்களை தமிழ்க் கல்விமான்களைக் கொண்டு எழுதுவிக்காமல், சிங்களத்தில் எழுதப்படுவனவற்றை மொழி பெயர்த்து அச்சிடும் முறை வந்தது.

இந்தப் பாடநூல் ஆக்கமுறை இப்போது தமிழ் மாணவர்களின் கல்வியைக் கழுத்தோடு வெட்டிவிடும் கத்தியாக மாறி உள்ளது. அவர்கள் தமது மொழி, கலாசாரம், வரலாறு ஆகியவற்றைச் சரியாகவும் முழுமையாகவும் பயில முடியாது மறைக்கும், தடுக்கும் சதி இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கிறது எனலாம்.

மேற்கூறிய 'இலட்சியத்தை' அடைவதற்கான அரசியல் பின்னணி கொண்ட திட்டமிட்ட செயற்பாடு இது என்று கருதுவதற்கு எவ்வித , எதிர்வாதமும் இருக்கமுடியாதே! தமிழ்ப் பாடநூல் விவகாரத்தில் இத்தனை வருடங்களாக அரசாங்கம் அக்கறை செலுத்தி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு பின்னிற்பது ஏனோ?

# வெப்பகாலத்தில் வெளிக்கிளம்பும் வெள்ளைப் பூரான்கள்!

கடந்த ஆண்டு, வடமராட்சி, வலிகாமம் கிழக்குப் பகுதி வாழ் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக விளங்கி வந்த வெள்ளைப் பூரான்கடி மீண்டும் அப்பகுதிகளில் தலைதூக்கியுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் பூரான்கடி அச்சம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இதன் நடமாட்டம் குறைந்த காணப்பட்ட போதிலும் தற்போது வெப்பகாலம் ஆரம்பித்ததும் இதன் நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கரவெட்டியில் கடந்த வாரம் அதிகாலை படுக்கையில் இருந்த இரு சகோதரர்கள் இப்பூரானால் கடியுண்டு விஷம் அதிகரித்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை தினேஷ்குமார் (வயது 14) அவரது சகோதரி செல்லத்துரை அபிராமி (வயது 9) ஆகிய இருவருமே வெள்ளைப் பூரானால் தீண்டப்பட்டவர்களாவர்.

இருவரில் ஒருவர் அதிதீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

வெள்ளைப் பூரான் அல்லது வியர்வைப் பூரான் என்றழைக்கப்படும் இப்பூரான்கடி கடும் வெய்யில் வரட்சிநிலவும் காலத்திலேயே அதிகரிக்கும் எனவும் மரணத்தை ஏற்படுத்துமளவிற்கு பாதிப்பு அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இப் பாதிப்பு இளம் பெண்கள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரையே அதிகளவில் பாதிக்கும் எனவும் இது கடித்ததும் தாமதியாது தகுந்த சிகிச்சையை உடன் மேற்கொள்வது அவசியம் எனவும் வைத்திய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி மடல்**

தகுந்த சிகிச்சை உடன் மேற்கொள்ளப்படுமிடத்து உயிராபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

அநேகமாக இந்த வெள்ளைப்பூரான் கடி மரணங்கள் வடமராட்சியிலும் வலிகாமம் கிழக்குப் பகுதியிலுமே அதிகளவில் இடம் பெறுகின்றன.

கடும் வரட்சி, வெயில் நிலவும் காலங்களிலேயே இதன் பாதிப்பும் அதிகமாகவுள்ளது.

கற்பாறைகளின் கீழ்வாழும் இந்த விஷப் பூரான்கள் கடும் வெயிலில், வரட்சிக் காலங்களில் கற்களில் வெப்பம் ஏறத் தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறி, ஈரலிப்பான இருளான இடங்களை நாடிச் செல்கின்றன. இதற்குச் சாதகமாக இருக்கும் உக்கிய மரக்குற்றிகள், பனை, தென்னை என்பவற்றின் ஓலைகள், தோட்ட நிலங்கள் வாழைச் சருகுகள், நீரோட்ட மானவாய்க்கால்கள், வீடுகள், மெத்தைகள், பாய்கள், உடைகள்மற்றும்தளபாடப்பொருள்கள், கூரைகள், இடுகுகளுக்கிடையில் பதுங்கிவாழும்.

எனவே வெப்பகாலம் ஆரம்பமாகியுள்ள இவ்வேளையில் இப்பூரான்களும் வெளிவர ஆரம்பித்துள்ளன. மக்கள்இவை குறித்து மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும். மேலும் இப்பூரானால் தீண்டப் பட்டதும் மக்கள் மிக அவசரமாகச் செயற்பட்டு சிகிச்சையை விரைவில் வழங்க வழிசெய்ய வேண்டும்.

இப்பூரான் தீண்டியதும் விறுவிறுப்புடன் கூடிய - எரிவது போன்றநோ ஏற்படும். கொட்டிய இடத்தில் ஊசி குத்தியதுபோன்ற சிவப்பு நிறப் புள்ளிஒன்று தென்படும் தலைச்சுற்று, தலைப்பாரம், அதிக அளவில் வியர்வை, கூடுதலான எச்சில் வடிதல், வாயால் நுரைதள்ளுதல், நெறிகட்டுதல், அமைதியற்ற தன்மை, கைகால் குளிர்தல், குமட்டல், வாந்தி, மூச்சுக்கஷ்டம், தாகமின்மைபோன்ற அறிகுறிகள் தோன்றும்.

பூரான் கடித்ததும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முன்பு செய்யக்கூடிய முதலுதவிகளைக் கட்டாயம் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட சிலருக்கு இந்த முதலுதவிச் சிகிச்சையே திருப்திகரமான சிகிச்சையாக அமையக்கூடும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பரபரப்படையாது சுறுசுறுப்பாகவும் சமயோசிதமாகவும்செயலாற்றவேண்டும்

முதலுதவிகளாக முதலில் கடித்தது என்ன என்பதை உறுதிசெய்யவேண்டும். இது வைத்தியசாலையில் சிகிச்சையை மேற்கொள்ள மிகுந்த உதவியாகவும் இருக்கும். அடுத்து கடிக்குள்ளானவரின் பயத்தைப் போக்கி அவரைத் திறந்த, காற்றுப்படக்கூடிய இடத்தில் இருக்கவைத்தல் வேண்டும். கடியுண்ட இடத்தை விறைக்கும் வகையில் குளிர்ந்த நீரில் நனையும்படி வைத்திருக்கவேண்டும். அத்தோடு உடலில் ஏனைய பகுதிகளையும் குளிராக வைத்திருத்தல் வேண்டும். போதியளவில் குளிர்ந்த நீர் குடித்தல் வேண்டும். இது போன்ற முதலுதவிகளுடன் விஷம் தீண்டியவரை அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு உடன் அழைத்துச் செல்லல் வேண்டும் ★

**- கதாகரன் -**

## மாணவர்கள் மத்தியில் கட்டுரை, சித்திரப் போட்டிகள்

அச்சுவேலி, மார்ச் 28

நீர்ப்பாசனத்திணைக்களத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர் மத்தியில் கட்டுரை, சித்திரப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களம் ஏற்பாடுசெய்துள்ள கட்டுரை, பேச்சுப்போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டுரைப் போட்டிகள் 6ஆம் — 8ஆம் வகுப்புப் பிரிவு 9 ஆம் — 11 ஆம் வகுப்புப் பிரிவு, 12ஆம் —13 ஆம் வகுப்புப்பிரிவு எனவும்—

சித்திரப்போட்டிகள்1ஆம்— 5 ஆம் வகுப்புப்பிரிவு, 6 ஆம்— 9ஆம்வகுப்புப்பிரிவு, 10ஆம் 13 ஆம் வகுப்புப் பிரிவு எனவும் மூன்று பிரிவுகளிலும் நடத்தப்பட உள்ளது.

(இ–11)

## கணனி

நெல்லியடி, மார்ச் 28

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 17 கணனி இயந்திரங்கள் திருமலையிலிருந்து எடுத்து வரப்படவிருக்கின்றன.

(இ-109)

## சத்துணவு

தென்மராட்சி, மார்ச் 28

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் போஷாக்கு குறைந்த மாணவர்களுக்கு சத்துணவு வழங்க நகரசபையினால் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாவுக்கு சத்துணவு கொள்வனவு செய்யப்பட்டு அந்தந்தப் பாலர் பாடசாலை ஆசிரியைகள் மூலம் பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

[இ-117]

## நாளை

**பங்குனி 16**

**புதன்கிழமை**

திதி: நவமி முன்னிரவு 8.59 வரை.

நட்சத்திரம்: பூராடம் காலை 7.32 வரை.

சுபநேரம்: 4.43 - 6.13

ராகுகாலம்: 12 13 - 1 43

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

## கோழிக்குஞ்சு விநியோகம்

சண்டிலிப்பாய், மார்ச் 28

சண்டிலிப்பாயில் இயங்கி வரும் சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி பணிமனையில் அச்சுவேலி பிராந்திய கோழிப்பண்ணையிலிருந்து ஒரு நாள் வயதுடைய 'ஷேவர்' எனப்படும் கோழிக்குஞ்சுகள் இப்பகுதி மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தக் கோழிக்குஞ்சுகளை பெறவிரும்பும் இப் பிரிவில் வசிப்பவர்கள் மட்டும் சண்டிலிப்பாய் டச்சு வீதியில் செயற்பட்டு வரும் கால்நடை வைத்திய அதிகாரியின் பணிமனையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவல், பேடு என்று பால் பிரிக்காத இந்த 'ஷேவர்' இனக்கோழிக் குஞ்சை 22 ரூபா விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் இப் பணிமனையினர் தெரிவித்தனர். (ஐ–135)

**உதய வாக்கு**

நல்வினை புரிந்தவன் இங்கும் இறந்தபாலும் இம்மையிலும் மறுமையிலும் எப்போதும் தனது தூய வினைகளைக் கண்டு இன்பம் எய்துகிறான்.

- புத்தர்

## புதிய சித்திரத்தேர்

நெல்லியடி, மார்ச் 28

சுமார் 30லட்சம்ரூபா செலவில் கரவெட்டி, சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்தபதி இராஜலிங்கம் தலைமையில் புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வரும் இவ்வேளையில், தேர்தரிப்பிடமும் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆலய திருப்பணிச் சபைத் தலைவரும் சமாதான நீதிவானுமாகிய ச. செவ்வந்தி நாதர் தெரிவித்தார்.

(இ-109)

## கட்டடம் திறப்பு விழா

நெல்லியடி, மார்ச் 28

வல்வெட்டித்துறையில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட திருமகள் சனசமூக நிலையக் கட்டடம் அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத்திறப்பு விழாவில் வல்வெட்டித்துறை நகரசபைச் செயலர் பெ. கனகசபாபதி உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

(இ–109)

## நகர சபைத் தலைவர்களுக்கு 'பிக்கப்'

நெல்லியடி, மார்ச் 28

யாழ் மாவட்டத்திலுள்ள மூன்று நகரசபைத் தலைவர்களின் பாவனைக்கென கொழும்பிலிருந்து 'பிக்கப்' வாகனங்கள் எடுத்துவரப்படவிருக்கின்றன.

பருத்தித்துறை. வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய நகரசபைகளுக்கே இந்தப் பிக்கப் வாகனங்கள் அனுப்பி வைக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

[இ-109]

## தவக்காலச் சிந்தனை

(இருபத்தோராம் நாள்)

''உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.'' (மத்தேயு 18:35)

மன்னிப்பு என்பது உண்மையான அன்பின் சிகரம். நாம் அன்பு உள்ளவர்களைத்தான் மனதார மன்னிக்க முடியும். ஆனால் இயேசு பகைவரையும் மன்னிக்கவேண்டுமெனக் கட்டளை இடுகின்றார். தம் வாழ்நாள்களில் வாழ்ந்தும் காட்டியுள்ளார். நாம் எம் பிழைகளைப் பிறர் மன்னிக்க வேண்டுமெனக் கருதுகின்றோம். ஆனால் மற்றவர்களுடைய தவறுகளைப் பெரிதுபடுத்திப் பிளவுகளை ஏற்படுத்தி விடுகின்றோம். இங்குதான் இயேசு எமக்குக் கண்டிப்பான கட்டளையை விடுக்கின்றார். நீ உன் சகோதரனை மன்னித்தால்தான் உனக்கு மன்னிப்பு உண்டு என்கிறார்.

எம் வாழ்நாள்களில் நாம் மற்றவர்களுடைய சிறிய பிழைகளைப் பிரசாரப்படுத்தி அவர்களுடைய நற்பெயர்களைப் பங்கப்படுத்திய சந்தர்ப்பங்களைச் சிந்திப்போம். மன்னிப்பா, இவனுக்கா, கடைசிவரையிலும் இல்லை என நாம் சாதாரண பிரச்சினைகளுக்கு எமது மனங்களைக் கல்லாக்கி மற்றவர்களின் துன்பங்களில் இன்பம் காணும் கொடூரம் நிறைந்தவர்களாக மாறிக் கொண்டு வருகின்றோம். எனவே இந் நிலைகளை மாற்றி, மன்னிப்பு இறையன்பின் ஊற்று என்பதை மனதில் இருத்தி, இந்தத் தவக்காலத்தை நல்ல முறையில் பயன்படுத்துவோம்.

யோ. மாலினி
(திருநெல்வேலி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஆவரங்கால் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த மாணிக்கன் குமார்கிருஷ்ணனின் விசேட அ. அட்டை (இல. 0903022377) 22-03-2000 அன்று யாழ்ப்பாணத்துக்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தீபன் தையலகம் புத்தூர் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(74878)

திருமதி க. ஜெயதேவி என்பவரின் மூக்குக்கண்ணாடி (கவருடன் கூடிய) 24-03-2000 அன்று தட்டாதெருச் சந்திக்கும் மானிப்பாய்க்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மனிதாபிமான முறையில் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும். இல. 45, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
(74841)

குருக்கள் கோயில் வீதி நவாலி வடக்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுஜீவா என்பவரது விசேட அ. அட்டை (0905012422) 25-03-2000 அன்று மானிப்பாய் சந்தைக்கும் அட்டகிரி கோயிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தி. வடிவேல் தந்தை இல்லம், நவாலி வடக்கு எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(74872)

### வாடகைக்கு

யாழ். நகரை அண்டிய மையப்பகுதியிலும் மக்கள் குடியிருப்பு நிறைந்த பிரபல பாடசாலை, அலுவலகங்களுக்கு அருகிலும் இருபது வருடங்களுக்கு மேல் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரபல பலசரக்கு வர்த்தக வியாபார ஸ்தாபனம் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- விளம்பர இல. 1033, மே/பா உதயன்.
(சி/11524)

### விற்பனைக்கு

பெருந்தொகையான நல்ல தரமான தேங்காய்கள் விற்பனைக்குண்டு. விலை 6/- — 4/- வரை தொடர்பு இல. 57, ஆஸ்பத்திரி வீதி, (கொட்டடிச் சந்தி), யாழ்ப்பாணம். (74861)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி(Cullbird) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இராசநாயகம், 38/10, மருதடி வீதி. சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(74822)

## குடும்பஸ்தரைக் காணவில்லை

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 18 ஆம் திகதியிலிருந்து காணாமல் போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் அன்னராசா (வயது 49)என்பவரே காணாமல் போனவராவார்.

## கருத்துரை

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஆதரவில் ''பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கள் — வளர்ச்சியும் நெருக்கடியும்'' என்ற தலைப்பில் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி கருத்துரை வழங்குவார்.

இந்தக் கருத்தரங்கு நாளை புதன்கிழமைமாலை3மணிக்கு புவியியற்கழக மண்டபம் 2 இல் நடைபெறும். (க-7)

## யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாணப் பொருள்களைக் கொழும்புக்கு

# குமணை கப்பலில் அனுப்புவோரது கவனத்துக்கு!

எதிர்வரும் ஏப்ரல் மாத முதற்கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குமண கப்பல் கொழும்பிற்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் பொருள்களைக் கொண்டு செல்ல விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- இங்கிருந்து அனுப்பும் பொருள்களின் பெயர், அதன் அளவு போன்ற விவரங்களையும் அத்துடன் பொருள்களைப் பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விவரங்களையும் 31—03—2000 வெள்ளிக்கிழமைக்கு முன் செயலகப் புனர்வாழ்வுப்பகுதியில் சமர்ப்பிக்க வேண்டும்.
- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பழுதடையக் கூடிய பொருள்களுக்கு கப்பல் கட்டணம் இல்லை. எனினும் பருத்தித்துறை, துறைமுகத்தில் பொருள்களை ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.
- பழுதடையாத ஏனைய பொருள்களுக்கு ஒரு CBM/MT இற்கு 25% கப்பல் கட்டணமும் அத்துடன் பொருள்களை பருத்தித்துறை, துறைமுகத்தில் ஏற்றி இறக்குவதற்குரிய கையாளற் கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

எனவே பொருள்களை ஏற்ற விரும்புபவர்கள் பொருள்களின் விவரம், சரியான அளவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் 31—03—2000 மதியம் 12.00 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்குப் பின்னர்வரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற் கொள்க.

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

[சி/11548]

## கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவு முன்னாள் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

பாசமிகு தந்தை

### கார்த்திகேசு சோமசுந்தரம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

க. அரசரத்தினம் குடும்பம்
உதவிக் கல்விப்பணிப்பாளர், நெடுந்தீவுக்கோட்டம்
(74880)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
31
—
03
—
1906



மறைவு
27
—
02
—
2000

### அமரர் பொன்னம்பலம் வடிவேலு

(சிங்கர்)

27-02-2000 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் செய்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (28-03-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

136, வங்கி வளவு,
சுன்னாகம்.
(74882)

# விஷமிகளால் வீடு எரிப்பு; உரும்பிராயில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த சனிக்கிழமை உரும்பிராய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்று விஷமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் தெற்கு, தினகரன் வீதியில் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடே எரிக்கப்பட்டது.

குறிப்பிட்ட வீட்டில் உள்ளவர்கள் சம்பவ தினத்துக்கு மறுநாள் வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பு செல்லவிருந்தனர் என்றும் இதையறிந்த விஷமிகள் சிலரே வீட்டை எரித்ததாகவும் தெரியவருகிறது.

இதனால் வீட்டில் இருந்த அடையாள அட்டைகள் உடுபுடைவைகள், நிவாரண உணவுப் பொருள்கள் யாவும் எரிந்து நாசமாகின.

இந்த வீடு அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில் பல வீடுகள் நெருக்கமாக இருந்த போதிலும் அவை தெய்வாதீனமாகத் தப்பிவிட்டன.

(இ-10)

## வதிவிடச் சான்றிதழ் புத்தகம் இல்லை

வலி.வடக்கு, மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களிடம் வதிவிடச் சான்றிதழ் புத்தகம் கிடையாது.

இந்த புத்தகத்தைப் பெற்றுத் தரும்படி பிரதேச செயலகங்கள் மட்டத்தில் கிராம அலுவலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

[இ-86]

## பயிற்சி நெறி அங்குரார்ப்பணம்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் அனுசரணையுடன் கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் நடத்தும் மகளிருக்கான அடிப்படைப் பயிற்சிநெறி கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது-

50 மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் கூட்டுறவு மகளிர் குழுத்தலைவி, கூட்டுறவுச் சபை மகளிர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் பயிற்சிநெறி ஆசிரியை ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

(இ-10)

## வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி

# விண்ணப்பம் கோரல்

வலி. கிழக்குப்பிரதேச சபையினால் நடத்தப்படும் பின்வரும் விளையாட்டுப் போட்டிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. மரதன் ஓட்டம் ஆண், பெண்**

**02. சைக்கிள் ஓட்டம் ஆண், பெண்**

மேற்படி போட்டிகளுக்கு வலி. கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றலாம். 03 - 04—2000 ஆம் திகதிக்கு முன்னர் 10/- செலுத்தி வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகம் நீர்வேலியில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**03. மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

மேற்படி போட்டியில் யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றலாம். 03 — 04 — 2000 ஆம் திகதிக்கு முன்னர் 50/- செலுத்தி வலி. கிழக்குப்பிரதேச சபைத் தலைமை அலுவலகம் நீர்வேலியில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பூ. குணசிங்கம் ஜே. பி. யூ. எம்.
தலைவர்.

வலி. கிழக்குப் பிரதேச சபையும்,
விளையாட்டுக் குழுவும்.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
27—03—2000
[சி/11550]

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராசரத்தினம்

தம்பகாதம்பி வீதி, பளையைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் நேற்று (27-3-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சேதுப்பிள்ளையின் அருமை மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசமுத்துவின் அருமை மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஞானேஸ்வரியின் பாசமிகு தகப்பனாரும் சிவசெந்தில்நாதனின் மாமனும் றமேஸ், றமணன், நிசாந்தி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, அன்னமுத்து, பொன்னுத்துரை, சிவபாக்கியம், செல்வமணி மற்றும் இராசம்மா, தியாகராசா, அன்னபூரணம், நாகராசா ஆகியோரின் சகோதரனும் அன்னலட்சுமி காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியை நாளை (29-3-2000) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பத்தமேனி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. குகேஸ்வரன்
(மருமகன்)
T. P. 070-212534

பத்தமேனி,
அச்சுவேலி.
(74883)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குக

## 5 ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கோரிக்கை

திருகோணமலை, மார்ச் 28

வடக்கு—கிழக்குமாகாணத்தில் கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்றுஐந்துஆசிரியர் தொழிற் சங்கங்கள் கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரனவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக மேற்படி தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளன.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் மிக நீண்டகாலமாக மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர்.

எனவே இவர்களுக்கு நியமனம் வழங்கி வடக்கு—கிழக்கில் நிலவும் ஆசிரியர்கள் வெற்றிடத்தை நிரப்புமாறு கோருகின்றோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு பொது ஆசிரியர் சங்கம், வடக்கு—கிழக்கு தமிழ் ஆசிரியர் ஒன்றியம், திருகோணமலை மாவட்ட பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், திருகோணமலை மாவட்ட அதிபர்கள் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஆகியவை இணைந்து கூட்டாக இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளன.

மகஜரின் பிரதிகள் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் போன்றோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-5-150)

## வாகன இலக்கம்: மாற்றம் வரும்

கொழும்பு, மார்ச் 28

தாக்குதல் சம்பவங்களுக்கு பொய்யான இலக்கங்களைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக சகல மோட்டார் வாகனங்களினதும் இலக்கங்கள் மாற்றப்பட உள்ளன.

மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்படுவதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

வாகன இலக்கத்தில் அந்தந்த மாவட்டத்துக்கு உரிய இலக்கம் முதலில் சேர்க்கப்படும். இதனால் தாக்குதல்களில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் பற்றி இலகுவில் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## அ. அட்டை தொலைத்தோர் மீளப் பெற புதிய நடைமுறை

தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் அவற்றை மீண்டும் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது பின்பற்றுவதற்காக புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வந்துள்ளது.

இது தொடர்பான விரிவான சுற்றறிக்கை சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன தேசிய அடையாள அட்டையின் இலக்கம் கட்டாயமாக விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரியை கிராம அலுவலர் பிரத்தியேகமாக விசாரணைக்கு உட்படுத்தி தயாரித்த அறிக்கையும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

ஏற்கனவே உள்ள வழமையான நடைமுறைகளுடன் மேற்படி விடயங்களும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்களுக்கு பிரதி அடையாள அட்டை வழங்கும் போது ஏற்படும் தவறுகள் மற்றும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காகவே மேற்படி நடைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-99)

# இனப்பிரச்சினையில் எக்கட்சியும் நேர்மையாகச் செயற்படவில்லை

## சர்வோதயத் தலைவர் ஆரியரட்ண குற்றச்சாட்டு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலோ அல்லது போரை முடிவுக்குக் கொண்டு வருவதிலோ இதுவரை எந்த வொரு அரசியல் கட்சியும் நேர்மையான முறையில் செயற்படவில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ண.

கடந்த சனியன்று யாழ். நகரில் இடம்பெற்ற சமாதானப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் மௌனப் பிரார்த்தனை ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கலாநிதி ஆரியரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இரண்டு பெரும் கட்சிகளும் நேர்மையாக நடக்கவில்லை. இதனால் மக்கள் அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை இழந்து விட்டனர்.

ஆயுத பலத்தின் மூலமே இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரலாம் எனத் தொடர்ந்தும் எண்ணுவது அறியாமையே. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பேரணி குடாநாட்டு மக்கள் அச்சமற்ற சூழலையே விரும்புகிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு மக்கள் ஒன்று திரண்டு நடத்தும் சமாதானப் பேரணி வெற்றி பெற வேண்டும். இதற்காக சகலரும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

இனம், மதம் மற்றும் மொழி ஆகிய வேறுபாடுகளை மறந்து இலங்கையர்கள் ஒன்று சேர்ந்து செயற்படும் காலம் விரைவில் வந்து சேரவேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [இ-7]

# ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில்உள்ள ஆசிரியவெற்றிடங்களை நிரப்புவதற்காக ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து கடந்த நவம்பரில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குஅழைக்கப்பட்ட மற்றும் ஒருதொகுதியினரின் பெயர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், மனைப்பொருளியல், விவசாயம், உடற்கல்வி, சித்திரம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஏப்ரல் 17ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தர்மன் நகுலேந்திரன் (செல்வமால், தேவரயாழி, கரவெட்டி வடக்கு), தாரிணி தயாளன் (செல்வபவனம், தும்பளை கிழக்கு, கரவெட்டி) கதிர வேலு வாசுகி (கரவெட்டி கிழக்கு), மீரா அருளானந்தன் (பிருந்தாவனம், அளவை கிழக்கு), சுந்தரமூர்த்தி கிருபாகரன் (கரணவாய் வடக்கு, கரவெட்டி), சிவகலா சிவகுருநாதன் (அளவை), எஸ். பகீரதி (துன்னாலை மத்தி, கரவெட்டி). அமிர்தலிங்கம் பவுனந்தை (கோயில்கடவை, துன்னாலை மத்தி).

சிவகுரு மெ ஜ க த்ரீயி வான் (மாக்கெற் லேன், சுன்னாகம்) லக்ஷ்மனன் ராமணன் (சங்குவேலி, மானிப்பாய்) லக்ஷ்மனன் (சங்குவேலி, மானிப்பாய்) பாஸ்கரன் ஜீவனி (ஞானவாசா, உடுவில்) றுக்சி கமலநாதன் (தாவடி தெற்கு) துரைசிங்கம் கலைச்செல்வி (இணுவில் மேற்கு), திருச்செல்வம் கிருஷ்ணகுமார் (குப்பிளான் தெற்கு). பற்குணராஜா பங்கயவதனி (உடுவில் கிழக்கு) சண்முகநாதன் மீனா (இணுவில் கிழக்கு). ஜெயப்பிரியா சிவராஜா (சுதுமலை வடக்கு).

பாலகிருஸ்ணன் முகுந்தன் (சட்டம்பியார் வளவு, கரவெட்டி வடக்கு), செல்லத்தம்பி சுரேந்திரா (மாணிக்க தாரகை, அளவை), கனகசபை பிரபாகரன் (சரவண பவானந்த வித்தியாலய ஒழுங்கை, கோப்பாய் வடக்கு), பூபாலசிங்கம் விஸ்னுஸ்ரீ (திருவேங்கடம், அச்சுவேலி), பாலகிருஷ்ணன் நிரஞ்சன் (சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு), நடராஜா துஷ்யந்தினி (பழைய வீதி, கோப்பாய் தெற்கு). சுபாஜினி சண்முகராஜரட்ண சர்மா (சுந்தரோடை, சுன்னாகம்), சுதர்சினி செல்லப்பா (புன்னாலைக்கட்டுவன் தெற்கு).

சண்முகலிங்கம் நாகதாரணி (சுகந்தம் இணுவில் கிழக்கு). சிவகுருமோதிலால் கந்தையா [மாக்கெற் லேன், சுன்னாகம்], லிங்கரட்ணம் சைலினி [கந்தையா ரீச்சர் றோட், கந்தரோடை], நவரட்ணம் சுபாங்கி [சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்], ஈஸ்வரநாதபிள்ளை குமரன் [சுதுமலை தெற்கு, மானிப்பாய்], சண்முகம் பிறேம்குமார் (மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்), தேவதாஸ் யூரிசன்ஜெனராஜ் [கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு], கல்யாணி கமலேந்திரம் [சுதுமலை வடக்கு], சிறினிவாசன் ஜெயந்தி [சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு], செல்வராஜா சுரேஷ் [புலவர் வீதி, நவாலி வடக்கு].

குமாரசாமி சுஜாதா [சணல் வீதி, மாதகல்], பி. கமலேஸ்வரி [மாதகல் மேற்கு, மாதகல்], அருளையா ஜெயந்தி [மங்களமனை, ஆனைக்கோட்டை], சிவரட்ணம் சுபாங்கினி [உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்], சினிவாசம் விதுப்பிரியா (நல்லூர் வடக்கு, யாழ்.), நமசிவாயம் வித்தியா (உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்), இராமச்சந்திரன் பிரேம சாந்தி (ஆடியபாதம் வீதி, நல்லூர்), ஜெயனி இராசகோபால் (உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்), பிரிந்தா நடராஜா (நீர்வேலி மத்தி, நீர்வேலி), திருகேசன் மஞ்சுளா (கோப்பாய் வடக்கு, கோப்பாய்), சந்திரலிங்கம் பிரதீபா (அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி), ரி. ஈ. கிறிஸ்ரினி (கோப்பாய் வடக்கு, கோப்பாய்), சண்முகம் கலைவாணி, மகாதேவன் செந்தில்குமார் (உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்)

துரைராஜசிங்கம் யசோதை (இடைக்காடு, அச்சுவேலி), குமாரசாமி கேதீஸ்வரன் (பலாலி வீதி, திருநெல்வேலி), சிவலிங்கராஜா சிவமோகன் (பத்தைமேனி, அச்சுவேலி), யோகேஸ்வரன் விமலன் (3ஆவது மைல் கல், கல்வியங்காடு), கே. சத்தியபாமா (கோப்பாய் தெற்கு, கோப்பாய்), சிவலிங்கம் நந்தகோபன் (அளவெட்டி மேற்கு அளவெட்டி), பாலசுப்பிரமணியம், பிரமிளா, ஏரம்பமூர்த்தி சாந்தரூபி (பன்னாலை, தெல்லிப்பழை), பாலகிருஷ்ணன் முகுந்தன் (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), மகேஸ்வரன் மைதிலி (மணியம் வீதி, தெல்லிப்பழை), சண்முகநாதன் கௌசிதகி (தெல்லிப்பழை), ஜேசுபாலன் கிறிஸ்ரியா தாமரி (கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை), சந்திரேஸ்வரன் சுதாஜனி (அளவெட்டி மேற்கு, அளவெட்டி),

பாலசுப்பிரமணியம் சுபாஜினி (அம்பனை சந்தி, தெல்லிப்பழை), ஏரம்ப மூர்த்தி பகீதரன் (பன்னாலை, தெல்லிப்பழை), சிவசரணம் வனிதகுமாரி (கோனாவளை, வசாவிளான்), பாலசிங்கம் ஜெகன் (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை), நவரட்ணம் விஜிதா (மாவிட்டபுரம், தெல்லிப்பழை), குமாரசாமி கோகுலன் (ஆடியபாதம் வீதி, நல்லூர்), எஸ். ஜெயந்தி (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), பாலசாமி ரூபன் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), மோகன்குமார் எஸ். எவ். (இளவாலை மேற்கு, இளவாலை), தாட்சாயினி ஞானேந்திரன் (மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்), பொன்னம்பலம் சுதாஜினி (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை), பசுபதி சத்தியபாமா (பிரான்பற்று, பண்டத்தரிப்பு), பொன்னம்பலம் சிறிதரன் (மாகியப்பிட்டி சண்டிலிப்பாய்)

தேவராஜா சிறிரஜனி (சிவன் கோவிலடி, சித்தங்கேணி), தர்மினி இராஜரட்ணம் (சிவம்புளியடி, சங்கானை), விஜனி ராஜேந்திரா (கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை), செல்வராஜா சதாஜினி (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை) சோபனா நவரட்ணம் (மூளாய் வீதி, வட்டுக்கோட்டை), கனகசந்திரமூர்த்தி பாமினி (பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்), ஏ. தர்சினி (மூளாய் வீதி, வட்டுக்கோட்டை), மஞ்சுளா நித்தியானந்தன் (லக்ஷ்மி வாசா, சித்தங்கேணி), தக்ஷாயினி நவரத்தினராஜா (சித்தங்கேணி), பாலசுகந்தினி தனபாலசிங்கம் (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை). தக்ஷாயினி கேசவராஜன் (கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை)' டினாந்தி சர்மினி கணேசன் (வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை), குமரகுருநாதன் அம்பிகை (மூளாய், சுழிபுரம்), மகேந்திரன் ஜெயசோதி (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை), பொன்னுத்துரை தேவமலர் (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை), முத்தையா கந்தசெல்வன் (சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்).

(இ - 4-910)

(தொடரும்)

## விஸ்தரிப்பு

சாவகச்சேரி ஐயாகடையடி வரை வழங்கப்பட்டுள்ள 24 மணி நேர மின்சார விநியோகம் மீசாலை புத்தூர் சந்தி வரை நீடிக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதி இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் மின்விநியோக கம்பிகள் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-117]

## லண்டன் பயணம்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. விக்னேஸ்வரன் குகேந்திரன்[ஜெகன்] உட்பட 20 பேர் அடங்கிய நாடாளுமன்றக் குழு ஒன்று நேற்று முன்தினம் லண்டன் பயணமாகியது.

லண்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ''தனியார் மயப்படுத்தல்'' பற்றிய விவரங்களை அறியவே இவர்கள் லண்டன் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மாவை சேனாதிராஜா, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த இரா. யோகராஜன் ஆகியோரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் அடங்குவர்.

ஏப்ரல் 10ஆம் திகதி வரை இவர்கள் வெளிநாடுகளில் தங்கியிருப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-7]

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளிவருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 27 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சாவகச்சேரி**

(131281 ஏ), (137494ஏ), (137494 பி), (139318 ஏ), (139318 பி), '(139318 சி). (139328 ஏ), (139328 பி). (139328 சி), (139334 ஏ), (139338 ஏ), (139368 ஏ), (139392 ஏ), (139880 ஏ), (139880 பி), (141463 ஏ), (141463 பி), (141498 ஏ), (141498 பி),
(131505 ஏ), (131505 பி), (131505 சி), (139207 ஏ), (139960 ஏ).

**யாழ்ப்பாணம்**

(102300 ஏ),(122758 ஏ), (122758 பி), (128409ஏ), (128417 ஏ), (128605 ஏ), (128605பி), (128605 சி), (128672 ஏ), (128672 பி), (128829ஏ), (128829 பி), (128829 சி), (128829டி), (130135 ஏ), (130160 ஏ), (130453 ஏ), (130453 பி), (131935 ஏ), (131935பி), (131935 சி), (131936 ஏ), (131936பி), (132155 ஏ), (132190 ஏ), (132190 பி), (132268 ஏ), (132268 பி). (132268 சி), (132268 டி), (132336 ஏ), (132339 ஏ), (132339 பி), (132343 ஏ), (132343 பி), (132347 ஏ), (132347 பி), (132347 சி), (132347 டி), (132347 ஈ), (132347எவ்), (132350 ஏ), (132351 ஏ), (132351 பி), (132359 ஏ), (132366 ஏ), (132366 பி), (132366 சி), (132373 ஏ), (132373 பி), (132375 ஏ), (132382 ஏ), (132382 பி), (132384 ஏ), (132411 ஏ), (132413 ஏ), (136888 ஏ), (136902 ஏ), (136902 பி), (136904 ஏ), (136930 ஏ), (136930 பி), (136931 ஏ), (136934 ஏ), (136935 ஏ), (136938 ஏ), (136939 ஏ), (136945 ஏ , (136945 பி), (136984 ஏ), (136991 ஏ), (136991 பி), [136999ஏ], [137003ஏ], [137007ஏ], [137007பி], [137014ஏ], [137020ஏ], [137020பி], [137046ஏ[, [137057ஏ] [137057பி], [137057சி], [137061ஏ], [137061பி[, [137065ஏ], (137081ஏ), (137081பி), (136086ஏ), (137087ஏ), (137087பி), (137095ஏ), (137095பி), (137095சி), (137100ஏ ), (137104ஏ), (137110ஏ), (137112ஏ), (137143ஏ), (137146ஏ), (137146பி), (137161ஏ), (137166ஏ), (137167ஏ), (137177ஏ), (137179ஏ), (137183ஏ), (137183பி), (137188ஏ), (137189ஏ), (137190ஏ), (137192ஏ), (137195ஏ),
(137196ஏ), (137202ஏ), (137204ஏ), (137242ஏ), (137244ஏ), (137267ஏ), (137267பி), (137286ஏ), (137290ஏ), (137306ஏ), (137308ஏ), (137308பி), (137313ஏ), (137313பி), (137317ஏ), (137317பி), (137320ஏ), (137321ஏ), (137328ஏ), (137329ஏ), (137336ஏ), (137337ஏ), (137343ஏ), (137345ஏ), (137345பி), (137345சி), (137345டி), (137346ஏ), (137352ஏ), (137352பி), (137361ஏ), (137373ஏ), (137375ஏ), (137375பி), (137819ஏ), (138681ஏ), (138687ஏ), (138727ஏ), '(138731ஏ), (138738ஏ).
(138748ஏ), (138748பி), (138743சி), (138750ஏ), (138754ஏ), (138755ஏ), (138755பி), (138758ஏ), (138763ஏ), (138763பி), (138763சி). (138763டி), (138790ஏ), (138790பி), (138791ஏ), (138792ஏ), (138794ஏ), (138796ஏ), (138796பி), (138797ஏ), '(138798ஏ), (138798பி),
(138800ஏ), (138804ஏ), (138806ஏ), (138807ஏ), (138808ஏ), (138809ஏ), (138812ஏ), (138813ஏ), (138816ஏ), (138829ஏ), (138831ஏ), (138835ஏ), (138845ஏ), (138849ஏ), (138849பி), (138849சி), (138854ஏ), (138859ஏ), (138860ஏ), (138874ஏ), (138875ஏ),
(138878ஏ), (138898ஏ), (138949ஏ), (138967ஏ), (138967பி), (138067சி),

**நல்லூர்**

(131940ஏ(, (132173ஏ), (132188ஏ), (132383ஏ), (132383பி), (137103ஏ), (137194ஏ), (137198ஏ), (137241ஏ), (137312ஏ), (137312பி), (137312சி), (137312டி), (137312ஈ), (137326ஏ), (137351ஏ), (137368ஏ), (137368பி), (138706ஏ),

(க-10

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கொக்குவில் மேற்கு

**அமரர் பசுபதிப்பிள்ளை சுப்பிரமணியம்**

(லொஜிக் சுப்பர் — பிரபல அளவையியல் ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி.)

| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 23—07—1948 | 09—04—1999 |

திதி: 28—03—2000

சொர்க்கத்தில் நீ சேர்ந்து
ஓராண்டு சென்றதின்று .........
பக்கத்தில் நீயில்லாப் .........
பரிதவிப்பில் நாங்கள் இங்கு,
தர்க்கத்தில் புலமை பெற்ற
பேராசானாகி நின்று — நீ
கற்பித்துக் கரை சேர்த்து .........
கலங்கரை விளக்கானாய்!
துயரென்னும் சாகரத்தில்
துவள்கின்ற எங்களுக்கு
பயம் நீக்கிப் பயணிக்க — உன்
நினைவுகளே ஒளியாகும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

**அன்பு மனைவி, மகன், சகோதரர்கள், சகோதரி, மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்.**

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(74874)

## வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

கைதடி, மார்ச் 28
கைதடி கொற்றங்கூடல் சந்தியிலிருந்து கைதடி வடக்கே செல்லும் வன்னிய சிங்கம் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதியைத் திருத்தி உதவுமாறு கைதடி சைவ ஐக்கிய சங்கம் சாவகச்சேரி பிரதேசசபையிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-74)

## தோட்ட, பழமரச் செய்கைக்கு 300 பயனாளிகள் தெரிவு

வலி. வடக்கு, மார்ச் 28
நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பத்துக் கிராம அலுவலர் பிரிவுகளில் வீட்டுத் தோட்டச்செய்கை, பழமரச் செய்கை ஆகியனவற்றுக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் மேற்படி செயல் திட்டத்துக்கென 300 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்கள் முறையே கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கொக்குவில் கிழக்கு மேற்குப் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்துக்கு முறையே ஜே/114, ஜே/115, ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120, ஜே/121, ஜே/122, ஜே/124, ஜே/126 கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 30 பயணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (இ-86)

## வயல்களில் சிறுதானிய விதைப்பு

சுழிபுரம், மார்ச் 28
பொன்னாலை நெல் வயல்களில் சிறுதானிய விதைப்பு நடைபெற்று வருகின்றது. நெல் அறுவடை முடிவடைந்து நிலம் நல்ல ஈரலிப்பாக உள்ளது. அனேகமாக அனைவரும் எள்ளு விதைப்பையே மேற்கொள்கின்றனர்.

கலப்பைகள் மூலமாகவும் டிராக்டர்கள் மூலமாகவும் விதைப்பு மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இப் போகத்தில் எள் விளைச்சல் அதிக பயனைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-28)

## நிரந்தர உத்தியோகத்தர் இல்லை

வலி. வடக்கு, மார்ச் 28
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு நிரந்தரமான உயர் பதவிஅலுவலர்கள்இல்லாதது பெரும் குறையாக இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசசெயலாளர், கணக்காளர் பதவிகளில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களே நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சனத்தொகை கூடிய பிரதேசசெயலகம் நல்லூர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் பதில் பிரதேச செயலாளரும் ஒப்பந்த அடிப்படையிலேயே கடமையாற்றி வருகின்றார்.

நிரந்தரமான பிரதேச செயலாளர், கணக்காளர் போன்றவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-86)

## எழுவைதீவுக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

நெடுந்தீவு, மார்ச் 28
எழுவைதீவுக்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என எழுவைதீவு பங்குத் தந்தை அருள்திரு. யேசுதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தீவுப்பகுதிக்கு மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எழுவைதீவுக்கும் இதனை வழங்க வேண்டும் என அவர் கோரி உள்ளார். (இ-111)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| 12 | 31 |
| — | -- |
| 02 | 03 |
| — | — |
| 1942 | 1997 |

அமரர்

**நல்லதம்பி சுப்பிரமணியம்**

(இ. போ. ச. சாரதி, கோண்டாவில்)

மூன்று ஆண்டுகள் போன பின்பும் அப்பா!
முற்றத்தில் உங்கள் அடி அழியவில்லை!
அம்மா என்று அழைக்கும் குரல்!
அறையெல்லாம் கேட்குதப்பா!
பெரியதம்பி, பிரசாந்தி, குருவோடு, கோபியையும்
அழைக்கும் உங்கள் ஆசைக்குரல்
வளவுக்குள் வலம் வந்து
வான் பரப்பில் கேட்கிறதே!
தூண் அற்ற மறையானோம்
துறை காக்க ஓடி வாரீர்!

உங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.**

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.

(74873)

# யாழ். இந்துவில் கூடைப்பந்தாட்ட திடல்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் புதிய கூடைப்பந்தாட்டத் திடல் ஒன்றை பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் லின்டா ஜோய் டபில்ட் அம்மையார் கடந்த வெள்ளியன்று நாடாவை வெட்டி திறந்து வைத்த போது எடுக்கப்பட்ட படம்.

இடமிருந்து வலமாக கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் கே.கிருஷ்ணகுமார், பிரதி அதிபர் பொ.மகேஸ்வரன், அதிபர் அ.சிறிக்குமாரன், பழைய மாணவர் சங்கத் செயலாளர் ந.வித்தியாதரன், பழைய மாணவர் சங்க உபதலைவரும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கூடைப்பந்தாட்டத் திடலை அமைக்க உதவிய கல்லூரி பழைய மாணவரும், 'உதயன்' நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன், லின்டா ஜோய் டபில்ட் அம்மையார், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை, கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ்.அரச அதிபருமான க.சண்முகநாதன், கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எஸ். நிமலன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



திறந்து வைக்கப்பட்ட திடலில் பந்தை எறிந்து முதலாவது கூடையைப் போடுகிறார் லின்டா ஜோய் டபில்ட் அம்மையார்.



புதிய கூடைப்பந்தாட்ட திடலின் தோற்றம்

# கூட்டுறவுத்துறை வளர மக்கள் ஆதரவு தேவை

## ப.நோ.கூ. சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்28

கூட்டுறவுத்துறையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் மக்கள் ஆதரவு தர வேண்டும்.

இவ்வாறு யாழ். ப.நோ.கூ சங்கத்தின் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

யாழ். ப.நோ.கூ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

நெருக்கடியான காலத்தில் மட்டும் ப.நோ.கூ. சங்கங்களை மக்கள் நாடுகின்றார்கள். சாதாரண காலங்களில் மக்கள் ப.நோ.கூ சங்கத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்வதில்லை.

இந்த நிலை மாறி மக்கள் இயக்கமான கூட்டுறவுத் துறையினை வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் ஊழல் நிறைந்திருக்கிறது என்ற எண்ணம் மக்களிடையே நிலவி வருகிறது. எனவே தகுதியானவர்கள், ஆற்றலுள்ளவர்கள் கூட்டுறவுத்துறைக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

கூட்டுறவாளர்கள் தனியார்துறையினருக்குப் போட்டியாளர்களோ அல்லது எதிரானவர்களோ அல்லர் என்பதை தனியார் வர்த்தகர்கள் உணரவேண்டும்.

தனியார் துறையினர் கூட்டுறவுத் துறைக்குள் குறுக்கீடு செய்யக் கூடாது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டு வந்து மக்கள் எதிர்பார்க்கின்ற விலைச் சமன்பாட்டைச் சீர்செய்ய வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-5-9)

# 450 கிராம் எடையுடைய பாண் இனி 10 ரூபாவுக்கு விற்கப்படும்

## ஏப்ரல் 15 முதல் அமுலுக்கு வரும்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ். மாவட்டத்தில் ஏப்ரல் 15 ஆம் திகதி தொடக்கம் 450 கிராம் பாண் 10 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான முடிவு நேற்று யாழ். செயலகத்தில் நடந்த பாண் விலை நிர்ணயக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பேக்கரி உரிமையாளர் சங்கம் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பாண் விலை நிர்ணயம் தொடர்பாக பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் இடையில் பெரும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

450 கிராம் பாணை 10 ரூபா விலைக்குத் தமது சங்கப் பிரதிநிதிகளால் விற்பனை செய்ய முடியாது என்று பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் அங்கு தெரிவித்தனர். ஆனால் கூட்டத்தில் கலந்து கொண்ட ப.நோ.கூ. சங்கப் பிரதிநிதிகள் 450 கிராம் பாணை 10 ரூபாவுக்கு விற்க இணக்கம் தெரிவித்தனர்.

தற்போது 350 கிராம் பாண் 8 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டுவருகிறது. எனினும் பாணின் நிறை இடத்துக்கிடம் வேறுபடுவதாகப் பாவனையாளர்கள் முறையிட்டு வருகின்றனர்.

(ஐ-5)

மிலேனியம் ஆண்டில்
மங்களகரமான ஆரம்பம்
27.03.2000 நேற்று முதல்
பிரவீன் தொலைத் தொடர்பு சேவை
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.
(ஞானவீர சனசமூக நிலையம் முன்பாக)
தொலைபேசி இல.
உள்ளூர் - 021 - 3524
வெளியூர் - 0094 21 3524
(C/11555) - உரிமையாளர் -

## மரண அறிவித்தல்

### கோவிந்தபிள்ளை கந்தையா

நாரந்தனையைச் சேர்ந்த கோவிந்தபிள்ளை கந்தையா அவர்கள் 26.03.2000 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீதாலட்சுமியின் அன்புக்கணவரும் கன்னிகா பரமேஸ்வரி(கொழும்பு), சற்குணானந்தன்(கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகநாதன், (பஹ்ரெய்ன்) சந்திராதேவி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவாங்கதன், கார்த்திகாயினி, ஐங்கரன், அனுஜனா, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.நகுலகுலசிங்கம்
(மருமகன்)

இல.297, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

(74889)

## திருத்தம்

உதயன் 21.03.2000 ஆம் திகதிய இதழில் 11ஆம் பக்கத்தில் வெளியான திருமதி பத்மநாதன் சேதுப்பிள்ளையின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் -

இரண்டாவது பந்தியில், அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் பத்மநாதன் (இளைப்பாறிய நில அளவை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், என்ற வரிகளை -

அன்னார் இராமலிங்கம் பத்மநாதன் (இளைப்பாறிய நில அளவை உத்தியோகத்தர்) அவர்களின் அன்புமனைவியும் - என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

(ஆ-ர)

# அரியாலையில் கைதான இருவரும் நேற்று விடுவிப்பு

வலிவடக்கு,மார்ச்28

அரியாலைப் பகுதியில் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் நேற்று நண்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக பூம்புகாரில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலை மத்தியில் வசித்த பூவிலிங்கம் தபாபரன் (22 வயது) ஆனந்தன் சிவா (23 வயது), ஆகியோர் கைது செய்யப்பட்டு 512 ஆவது படையணியினரால் ஞானம்ஸ் ஹோட்டலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அப்பகுதி கிராம அலுவலர்கள் நவ ரத்தினராசா க.தேவராசா ஆகியோர் முன்னிலையில் ஞானமஸ் ஹோட் டல் முகாமில் வைத்து நேற்று விடு

## ஆலயத்தில் திருட்டு

வலிவடக்கு,மார்ச்28

கொக்குவில் தலையாளி ஞான வைரவர் ஆலயத்தில் கடந்தவாரம் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் இந்த ஆலயத்தில் இடம்பெற்ற நான்காவது திருட்டுச் சம்பவம் இதுவாகும்.

இது தொடர்பாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-86)

சரமாரியான வேட்டுக்களை அடுத்து

# சகோதரியும் கணவரும் இரத்த வெள்ளத்தில் கிடக்கக் கண்டேன்!

## ஓட்டோவில் சென்ற பெண்ணின் பயங்கர அனுபவம்

யாழ்ப்பாணம், மார்ச்28

திடீரென நாலாபுறமும் வெடிச் சத்தங்கள் கேட்டன. சிறிது நேரம் உணர்விழந்து போன நான் மீண்டும் எழுந்து பார்த்தபோது எனது சகோதரியும் அவரது கணவரும் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடப்பதைக் கண்டேன்.

பளை இத்தாவில் பகுதியில் நேற்று பிற்பகல் ஓட்டோ மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயங்களுடன் உயிர் தப்பிய திருமதி ராமச்சந்திரன் ஜெயலட்சுமி (வயது 42) என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.ஆஸ்பத்தியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர் தமக்கு நேர்ந்த கதி குறித்து 'உதயன்' செய்தியாளரிடம் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் பயணம் செய்த ஓட்டோ இத்தாவில் பகுதிக்கு சமீபமாக சென்றுகொண்டிருந்தபோது திடீரென ஷெல்கள் ஆங்காங்கு வீழ்ந்து வெடித்ததைக் கண்டோம்.

தொடர்ந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற் கொள்ளப்பட்டது. சுயநினைவு வந்தவுடன் நான் எழுந்து பார்த்தபோது ஓட்டோ சாரதி நிலத்தில் குற்றுயிராய் கிடப்பதைக் கண்டேன். சற்றுநேரத்தில் அவரிடமிருந்து எந்த அசைவும் இல்லை. ஏனைய இருவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரியில் குழந்தையை பெற்றெடுத்த எனது சகோதரி அவரது கணவன் மற்றும் பிறந்த குழந்தை சகிதம் யாழ். பஸ்நிலையப் பகுதியில் நின்றிருந்த ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி பளை இத்தாவில் பகுதியில் உள்ள எமது வீட்டுக்குப் புறப்பட்டோம்.

இங்கிருந்து காலை 11.30 மணியளவில் புறப்பட்டுச் சென்றோம். பிற்பகல் 2.30 மணியளவில் ஓட்டோ பளைக்குச் சமீபமாக சென்றுகொண்டிருந்த வேளை திடீரென பாரிய சத்தத்துடன் நலாபுறமும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் சரமாரியாகக் கேட்டன. என்ன நடந்தது என்று தெரியாது. ஓட்டோ சாரதி நிலத்தில் வீழ்ந்து கிடந்தார். எனது சகோதரியையும் அவரது கணவரையும் தட்டிப் பார்த்தேன் அவர்கள் இரத்த வெள்ளத்தில் அசைவற்றுக் கிடந்தனர்.

நான் ஓட்டோவுக்குள்ளேயே இருந்தேன். யாரும் வந்தால் என்னையும் சுட்டுவிட்டுப் போகட்டும் என்று. எவரும் வரவில்லை. அப்போது எனது உடலில் இரத்தம் வருவதை உணர்ந்து கொண்டேன். குழந்தை தெய்வாதீனமாக உயிர் பிழைத்து இருந்தது. சுமார் அரை மணி நேரத்தின் பின் குழந்தையையும் தூக்கிக் கொண்டு ஒருமைல் தூரத்துக்கு நடந்து வந்தேன். அதன் பின்னரே பொதுமக்கள் என்னை வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர்.எழுதுமட்டுவாள் பகுதியில் நின்ற பொதுமக்கள் எமது ஓட்டோ செல்லும்போது கையை அசைத்து செல்லவேண்டாம் என்று மறித்ததாகவும் எனினும் சாரதி அவர்களின் சைகையைக் கவனிக்காது சென்றதாகவும் அங்கிருந்தோர் தெரிவித்தனர்.

- என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-5-7-9)

# உரிமை மீறல் குறித்து ஐ.நாவுக்கு அறிக்கை

## தமிழர் மையம் சமர்ப்பிப்பு

புதுடில்லி, மார்ச்28

இலங்கையில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் மனித உரிமைகள் மீறல் குறித்து ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு மீண்டும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் மனித உரிமைகள் மையத்தின் சார்பில் அதன் செயலாளர் எஸ்.வி.கிருபாகரன் நேற்றுப் புதுடில்லியில் வைத்து இந்த முறைப்பாட்டைச் சமர்ப்பித்துள்ளார்.

புதுடில்லியில் கடந்த 22 ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் ஐநாவின் மனித உரிமைக் குழுவின் கூட்டத்தில் வைத்தே மனித உரிமைகள் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் தமிழ்மக்கள் மீது நடத்தி வரும் படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் சிறைக்கூடங்களில் சித்திரவதை கள், காணாமற்போதல் போன்ற விடயங்களும் -

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து படையினர் விலக்கப்படல் வேண்டும், தமிழ்ப் பகுதிகள் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளும் அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

(ஐ-7)

# அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு மாத கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்களில் ஊழியர்களுக்கு ஒரு மாதகால கணனிப் பயிற்சி வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 உழியர்களுக்கு பயிற்சி வழங்கப் படவுள்ளது.

தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் கட்டங்களில் ஏனையவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை முகாமைத்துவப் பயிற்சித் 'திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எபி.ஏ. முகைதீர் மேற்கொண்டு வருகிறார்.

## துணைப்படை உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,மார்ச்28

மணலாறுப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் மேஜர் சின்னவன் (சுப்பிரமணி யம் செல்வரட்ணம கிளிநொச்சி) என்ற துணைப்படை வீரர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-8)

## தேசிய கல்வி நிறுவக பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்28

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா 2 ஆம் வருடத்துக்கான பரீட்சை எதிர்வரும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாணப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(இ-7)



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியில் காங்கேசன்துறை வீதிக்கு அருகில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை திறந்து வைக்கப்பட்டது. மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்.தணிகாசலம்பிள்ளை நாடாவை வெட்டி பணிமனையை திறந்து வைத்த போது எடுக்கப்பட்ட படம் இது.

படம் : பொ.இராஜேஸ்வரன்.

## பளை வரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

கடற்படையின் தாக்குதலில் தப்பி தரையிறங்கிய புலிகள் அணி பளை வரை முன்னேறியதை ஒப்புக்கொண்டுள்ள படை வட்டாரங்கள், சிறிய எண்ணிக்கையினரான புலிகளே அவ்வாறு முன்னேறியிருப்பதாத் தெரிவித்துள்ளன.

பளையில் இரண்டு பீரங்கிளையே புலிகள் நாசமாக்கியதாகவும் -

அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சில புலிகளின் தாக்குதலில் நாசமாகியதாகவும் -

படைத் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

· கண்டி வீதியில் தினசரி காலையில் வீதித்துப்புரவுப் பணியில் ஈடுபட்ட பின்னரே படைவாகனங்கள் அதில் பயணம் செய்வது வழமை என்றும்-

பளை வரை புலிகளின் அணி ஒன்று முன்னேறி இருப்பதாலும் அப்பகுதியில் இடம்பெறும் சண்டை காரணமாகவும் நேற்று அப்பகுதியில் வீதித்துப்புரவுப் பணி இடம்பெறவில்லை என்றும்-

அதனால் பளைப் பிரதேசத்தில் கண்டிவீதியூடாக போக்குவரத்து இடம்பெறவில்லை எனவும் படைவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

"என்றாலும் கண்டிவீதிக்கு புறம்பாக - கண்டிவீதிக்கு கிழக்கே - ஆனையிறவு, இயக்கச்சிக்கு வேறு ஒரு விநியோகப்பாதை எமக்கு உள்ளது. எனவே ஆனையிறவுப் படைத்தளம் துண்டிக்கப்பட்டுவிட்டதாகப் புலிகள் கூறுவது தவறு" - என்றார் படைத்தரப்பு உயர் அதிகாரி ஒருவர்.

துண்டிக்கப்பட்ட கண்டி வீதியை மீண்டும் இணைப்பதற்காக அப்பிரதேசத்திலிருந்து புலிகளை துரத்துவதற்காக - இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்றிரவு அல்லது நாளை அப்பிரதேசம் மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வரும் என எதிர்பார்க்கின்றோம்." - என்றும் அவர் நேற்றுச் சொன்னார்.

"பளை வரை எத்தனை புலிகள் முன்னேறி இருக்கக்கூடும் என நீங்கள் கருதுகிறீர்கள்?" என்று அவரிடம் கேட்டபோது 30 முதல் 40 புலிகள் வரை இருக்கலாம் என்று அந்த உயர் நிலை அதிகாரி பதில் தந்தார்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சமரில் தமது தரப்பில் 11 இராணுவத்தினர் உயிரிழந்தனர் எனவும் -

23 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் -

'விடுதலைப் புலிகள் தரப்பில் பலர் உயிரிழந்துள்ளனர் என்றும் - அரசுத் தரப்பு அறிக்கைகள் தெரிவித்தன.

(உ-3-7-8-10)

# கொடிகாமம், கச்சாய் நோக்கி பொதுமக்கள் இடம்பெயர்கின்றனர்

யாழ்ப்பாணம்,மார்ச்28

பளைப் பிரதேசத்தில் தோன்றியுள்ள யுத்த சூழ்நிலையை அடுத்து அப்பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வீடு வாசல்களை விட்டு இடம்பெயரத் தொடங்கி உள்ளனர்.

முகமாலை, இத்தாவில், பளை, அல்லிப்பளை, புலோப்பளை, செல்வபுரம் அரசர்கேணி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு நேற்று பகல் இடம் பெயர்ந்து கொண்டிருந்ததை காண முடிந்தது.

இவர்களில் பலர் மிருசுவில், கொடிகாமம், கச்சாய் பகுதிகளுக்கு சென்றுள்ளனர்.

இதேவேளை -

வடமராட்சிப் பகுதி நோக்கியும் சில குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இன்று இப்பிரதேசத்தில் இருந்து மேலும் மக்கள் வெளியேறலாம் என்று என எதிர்பாக் கப்படுகின்றது.

(ஐ-7-118)

# மோதலை நிறுத்துமாறு இரு தரப்பிடமும் கோரிக்கை

## பிரதேச சபைத் தலைவர் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்28

பொதுமக்களின் நலன் கருதி தற்போதைய மோதல்களை நிறுத்திக்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரிடமும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எனது பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் மோதலில் ஈடுபடுபவர்களுக்கு பணிவான வேண்டுகோளை பத்திரிகை வாயிலாக விடுக்கின்றேன். 2000.03.26 ஆம் திகதி நள்ளிரவு முதல் வடமராட்சி கிழக்குப் பகுதியாகிய குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இம் மோதல்களில் சிக்குண்டு பொதுமக்கள் இருவர் மரணமடைந்துள்ளார்கள். மேலும் ஒன்பது பேர் காயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் மோதலினால் அநேகமான மக்கள். இடம்பெயர்ந்துள்ளனர்.மேலும் காயமடைந்தோரை மீட்பதற்கு மீட்புப் பணியாளர்கள் அங்கு செல்லமுடியாதுள்ளனர். மக்கள் குடியிருப்புக்களில் நடைபெறும் இம்மோதலை மனிதாபிமான முறையில் இரு பகுதியினரும் தவிர்த்துக்கொள்ளும் படியும் குற்றுயிராய் இருக்கும் காயமடைந்த மக்களை மீட்டு வைத்திய சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் மோதலில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் மோதலை நிறுத்திக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றேன். யுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மக்களை கேடயங்களாகப் பயன்படுத்துவதும் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் மோதலில் ஈடுபட்டு மக்களை சொல்லொணா வேதனைகளுக்கு உட்படுத்துவதும் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

(ஐ-118-173)

## விண்ணப்ப முடிவுதினம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ். கல்வியியற் கல்லூரிக்கு தற்காலிக விரிவுரையாளர்களை நியமிப்பது தொடர்பான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பீடாதிபதி அறிவித்துள்ளார்.

விண்ணப்ப இறுதித்தினம் இன்று என முன்னர் அறிவிக்கப்படிருந்தமை தெரிந்ததே.

(ஐ-7)

## காயமடைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கவே உறக்கத்தில் இருந்த மக்கள் விழித்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். அவ்வாறு ஓடிய பலர் ஷெல் சிதறல்க ளில் சிக்கிக் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

வீடுகளை விட்டு வெளியேறிய பெரும் எண்ணிக்கையானோர் கோயில்களிலும் தேவாலயங்களிலும் தங்கியுள்ளனர். காயமடைந்தோரில் சிலர் நீண்டதூரம் நடந்து வந்ததாகத் தெரிவித்தனர்.

மோதல் மூண்டிருப்பதையடுத்து செம்பியன்பற்றிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச்செல்ல முற்படுவதாகவும், இதனைத் தடுக்கும் நோக்கில் நாகர்கோயில் பகுதியில், வீதியின் குறுக்கே முட்கம்பியினால் மறிப்புப் போடப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

இச் ஷெல்வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் பிள்ளையும் பலியானதாகவும் தெரியவருகின்றது.

இவர்களது சடலங்கள் அங்கிருந்து மீட்க முடியாத நிலையில் கைவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

ஷெல் வீச்சுக்களினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. கால்நடைகள் பலியாகியுள்ளதாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொச்சுமட்டைக் குவியல்கள் எரிந்து நாசமாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை-

ஷெல்வீச்சில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பவர்களின் விவரங்களை பருத்தித்துறை பொலீஸாரும் இராணுவத்தினரும் சேகரித்துச் சென்றுள்ளனர்.

காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதில் பிரெஞ்சு டாக்டர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

(ஐ-7-8-15-109-118-173)

## நீதிவான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று இராணுவ அதிகாரிகள் உட்பட நாலு படையினரும் ஒரு முன்னாள் பொலீஸ் கான்ஸ்டபிளும் இன்று நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர்.

அன்னையர் முன்னணி உறுப்பினர்களை இன்று யாழ்.நீதிமன்றில் சமுகமளிக்குமாறு அன்னையர் முன்னணி கேட்டுள்ளது. (உ-3)

## ஓட்டோ மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாவில் பகுதியில் சென்று கொண்டிருந்த சமயம் ஓட்டோ மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

ஓட்டோ சாரதியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவலிங்கம் கணேசலிங்கம் (வயது 24) என்பவரும் இளம் தம்பதிகளான பளையைச் சேர்ந்த குமாரசாமி சிறீதரன், திருமதி லோகேஸ்வரி சிறீதரன் ஆகியோருமே இச்சம்பவத்தில் பலியாகினர்.

இவர்களுடன் கூடச் சென்ற பிரஸ்தாப தாயின் சகோதரியான இ.ஜெயலக்சுமி காயங்களுடன் தப்பியுள்ளார். பிறந்த நான்கு தினங்களேயான ஆண் குழந்தையும் தெய்வாதீனமாக உயிர் தப்பியது. அவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் சம்பவம் நடந்த இடத்திலேயே நேற்று மாலை வரை கிடந்ததாகத் தெரியவந்தது.

பளைப் பகுதியில் சண்டை மூண்டதை அடுத்து கண்டி வீதியூடான போக்குவரத்து நேற்று எழுதுமட்டுவாளுக்கு அப்பால் நீடிப்பட்டுப்போயிருந்தது.

(ஐ-5-8-9-15-139-173)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.